RECEIVED 9-7-1984 PERIODICALS DIVISION

★ விலை ரூபா 1-25

# ஈழநாடு
THE EELANADU

NATIONAL TAMIL DAILY

மலர் 26 ஆனி 26 ஷவ்வால் 10 இதழ் 146
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 10-7-84

## திருமலை வன்செயல்கள்:
## பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு கிடைத்தது!

(திருகோணமலை)
திருகோணமலை நகரில் கடந்த வருடம் ஜுலை மாதம் சேதப்படுத்தப்பட்ட அல்லது தீக்கிரையான வீடுகள், கடைகளுக்கு நஷ்டஈடு வழங்கப்பட்டுள்ளது.

ஜுலை 26ம் திகதி இரவு நிகழ்ந்த சம்பவங்களில் பாதிக்கப்பட்ட சகலருக்கும் 'றேபியா' இந்த நஷ்டஈட்டை வழங்கியது.

பாதிக்கப்பட்டவர்கள் சங்கத் தலைவர் ஜனுப் ஏ. ஸி. அலிஅக்பர்றேபியா தலைவருக்கு விடுத்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட றேபியா தலைவர் இதுகுறித்து அரசுக்கு சிபார்சு செய்திருந்தார்.

இதனையடுத்தே இந்த நஷ்டஈடு வழங்கப்பட்டது.

## கடத்தப்பட்ட வான் மர்மம் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)
கடந்த வியாழக்கிழமை கொக்குவிலில் வைத்து கடத்தப்பட்ட 'டெலிக்கா' வான் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

கொக்குவில் பிறவுண் வீதியில் வைத்து இரண்டு இளைஞர்களால் துப்பாக்கி முனையில் கடத்தப்பட்ட இந்த

(8ம் பக்கம் பார்க்க)

# பயங்கரவாதிகளின் புதிய தந்திரம்!

## 'லலித்' எச்சரிக்கை

(இ. கந்தசாமி)

**பயங்கரவாதிகள் இப்போது மக்கள் கூட்டத்தைத் தாக்கும் புதிய தந்திரத்தைக் கையாண்டுவருகிறுர்கள் என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித்அத்துலத்முதலி எச்சரிக்கைசெய்துள்ளார்.**

முன்னர் தனிநபர்கள் மீது தாக்குதலை நடத்திவந்த பயங்கரவாதிகள் இப்போது மக்கள் கூட்டத்தை தாக்கும் தந்திரத்தை கையாண்டு வருவதால் இதனை முறியடிக்க எதிர்நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியம் என்றும் அமைச்சர் கூறினுர்.

கொழும்பு 'கோல்பேஸ்' ஹோட்டலில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் ஹோட்டல் முகாமையாளர்கள், பிரதமபாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மத்தியில் பேசுகையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்,

கொழும்பையும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளையும் சேர்ந்த 90 ஹோட்டல் முகாமையாளர்களும் 90 பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் இக் கருத்தரங்கில் கலந்துகொண்டனர்.

ராஜாங்கஅமைச்சு ஏற்பாடு செய்திருந்த இக்கருத்தரங்கில் தகுதிவாய்ந்த அதிகாரியும் ராஜாங்க அமைச்சின் செயலாளருமான டக்ளஸ் லியனகேயும் கலந்துகொண்டார்.

பயங்கரவாதிகளின் புதிய தந்திரத்தை முறியடிக்க ஹோட்டல் ஊழியர்கள் கண்டிப்பாக இருக்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துமாறு அமைச்சர் ஹோட்டல் முகாமையாளர்களைக் கேட்டுக் கொண்டார்.

ஆடம்பரமற்ற முறையில்

## யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா!

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாண பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா இம்மாதம் 14-ந் திகதி சனிக்கிழமை கைலாசபதி அரங்கில் நாட்டின் நிலைமையை முன்னிட்டு ஆடம்பரமற்றமுறையில் நடைபெற ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

இவ்விழாவில் முதன்முறையாக யாழ். பல்கலைக்கழகத்திலேயே முழு மருத்துவப்படிப்பையும் முடித்துக்கொண்ட மருத்துவமானி பட்டதாரிகள் பட்டம்பெற்றுக்கொள்வார்கள்.

இவ்விழாவுக்கு பிரதம விருந்தினரென எவரும் இம்முறை அழைக்கப்படவில்லை. கடந்த வருடம் தஞ்சாவூர் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சுப்பிரமணியம் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டது தெரிந்ததே.

இம்முறை யாழ். பல்கலைக்கழகம் எவருக்கும் கௌரவப் பட்டங்கள் வழங்குவதில்லை எனத் தீர்மானித்துள்ளது.

யாழ். பல்கலைக்கழக வேந்தர் திரு. தம்பையா நடராசா தலைமையில் இப்பட்டமளிப்பு

(8ம் பக்கம் பார்க்க)

நயினை நாகபூஷணி உற்சவம்

## படகுகளில் அளவுக்கதிகமாக பயணிகளை ஏற்றத்தடை!

(வேலணை நிருபர் இ. சற்குருநாதன்)
வரலாற்றுப் புகழ் மிக்க நயினை நாக பூஷணி அம்பாள் ஆலய உற்சவத்திற்கு செல்லும் பயணிகளை ஏற்றிச்செல்லும் படகுகளில் அளவுக்கதிகமான பயணிகளை ஏற்றிச் செல்லக் கூடாது என கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்சப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். சடாட்சர சண்முகதாஸ் சுற்று நிருபம் ஒன்றை படகுச் சொந்தக்காரர்களுக்கு அனுப்பிவைத்துள்ளார், அந்த சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

'1984-ம் ஆண்டு ஜுலை மாதத்திற்குச் செல்லுபடியான அனுமதிப் பத்திரம் பெற்றிருக்க வேண்டுமென்பதுடன் அதைக் கைவசம் வைத்திருக்க வேண்டும். தண்டேல், இயந்திரம் இயக்குபவர் அனுமதி பெற்றவர்களாக இருப்பதுடன் அதற்கான அத்தாட்சிப் பத்திரத்தைத் தம்முடன் வைத்திருக்க வேண்டும்.

'அனுமதிப் பத்திரத்திற் குறிப்பிட்டவாறு உயிர் காப்புச் சாதனங்களான மிதக்கும் இரப்பர் வளையங்கள் முதலிபன போதுமான அளவுவைத்திருக்க வேண்டும்.

''அனுமதிக்கப்பட்ட பிரயாணிகளின் தொகை தெளிவான எழுத்துக்களாலும் இலக்கங்களாலும் பலரது காட்சிக்கும் தெரியக்கூடிய வகையில் படகில் குறிப்பிட்டிருக்க வேண்டும். எக்காரணங்கொண்டும் அனுமதிக்கப்பட்ட அளவிலும் மேலதிகமாக ஆட்களை ஏற்றிச் செல்லக்கூடாது.

'படகின் மேற்தட்டிலும், ஓரங்களிலும் பிரயாணிகளை

(8ம் பக்கம் பார்க்க)

## சைக்கிளில் சென்றவரை மோதிய மினிபஸ் மறைந்தது!
### குடும்பஸ்தர் பலி

(கிளிநொச்சி)
சைக்கிளில் சென்றுகொண்டிருந்த ஒருவரை மோதிய மினிபஸ் அவ்விடத்தில் நில்லாது ஓடி மறைந்துவிட்டதாம்.

இவ்விபத்தில் சிக்கிய இளம் குடும்பஸ்தர் பலியானுர். பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன ஊழியரான வி. யோகராசா (43 வயது) என்பவரே பலியானவராவார்.

மரணவிசாரணை நடத்திய பதில் நீதவான் வி. எஸ். சுந்தரலிங்கம், விபத்துமரணமெனத் தீர்ப்பளித்ததுடன் மினிபஸ்ஸையும் சாரதியையும் கைதுசெய்யுமாறு உத்தரவிட்டார்.



யாழ். லயன்ஸ் கழகத்தின் புதிய நிர்வாகிகள் பதவியேற்பு வைபவத்தில், புதிய தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட லயன் திரு. எஸ். அற்புதானந்தாவுக்கு பிரதம விருந்தினர் லயன் டாக்டர் அரியம் நல்லையா பதவிப்பிரமாணம் செய்துவைப்பதை முதலாவது படத்திலும் திரு. அற்புதான[illegible] முன்னுள் தலைவர் லயன்ஸ் பேராசிரியர் என். சரவணபவானந்தன் இருப்பதை இரண்டாவது படத்திலும் வைபவத்தில் கலந்துகொண்ட லயன் உறுப்பினர்களில் ஒருபகுதியினரை மூன்றுவது படத்திலும் காணலாம்,
(படம்: தேவா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

எழுதுமட்டுவாளில் நல்ல நிலையிலுள்ள ஓர் தென்னந் தோட்டம் உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு: 52, வைமன்வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22334. 796

திருநெல்வேலி யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கு அருகாமையிலுள்ள ஒழுங்கையில் (மாதனைபுலம்) ஒருபரப்பும் 16 2/3 குழியும் விற்பனைக்குண்டு. காணியில் கிணறும் பிரயோசனமுள்ள மரங்களும் உள்ளன. விபரங்களுக்கு திருமதி. உ. தங்கமணி, சங்கக்கடையடி, மாவிட்டபுரம், தெல்லிப்பழை. 794

கிளிநொச்சி கண்டிவீதியிலிருந்து வில்சன் வீதியில் 1ம் கட்டையருகில் வீடுகட்டுதற்குகந்த 1 ஏக்கர் மேட்டுக்காணி விற்பனைக்குண்டு. விளம்பர இல: 714, மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். (714)

டாக்டரின் சொந்தப் பாவிப்பிலுள்ள 3 சிறீ மொறிஸ் ஒக்ஸ்போட் கார் சிறந்த நிலையில் உடன் விற்பனைக்குண்டு. மகப்பெறுவும் பிணிதீர்மனையும், சந்தைச்சதுக்கம், சங்கானை. 746

'செற்று பாம்' ஒரு நாள் பேட்டுக்குஞ்சும் (B300, B380) ரோஸ் புரொயிலர் குஞ்சும், சாவற்குஞ்சும் 17/7/84 இல் விநியோகிக்கப்படும். தேவையானோர் முன்கூட்டியே பதிவு செய்யவும் விபரங்களுக்கு: R.S.K. Industries R.S கிருஷ்ணமோகன். முருகபதி, உடுவில். கவுரி போறேஸ் ஸ்டோஸ் யாழ்ப்பாணம். சிக் * ன்கைன்ஸ் யாழ்ப்பாணம். 756

## தேவை

புடவை வியாபாரத்தில் அனுபவமுள்ள ஆண்/பெண் இருபாலாரும் தேவை. அனுபவமுள்ளவர்கள் நேரில் தொடர்கொள்ளவும். த. சங்கரப்பிள்ளை அன் சன்ஸ், யாழ்ப்பாணம். 771

குருநகரில் இருக்கும் றூல் வாடிக்கு றூல் கிறேடிங் தெரிந்த பெண் பிள்ளைகள் உடன்தேவை. அனுபவசான்றிதழ்களுடனும் கிராமசேவையாளரின் நற்சான்று பத்திரத்துடனும் விண்ணப்பிக்கவும். முகவரி: எடிசன், மே/பா மேரிறேஸ். 129. 2ம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். நேர்முக பரீட்சை 14ம் திகதி காலை 8-00 மணிக்கும் 10-00 மணிக்குமிடையில் நடைபெறும். 758


**A/L 86**

**சனி, ஞாயிறு வகுப்பு**

பிரிவு II ஆரம்பம்:

**12-7-84**

(வியாழன்)

2–00: பிரயோக கணிதம்
3–30: தூயகணிதம்

TUTOR:

**Ravimohan**

74A, Clock Tower, Road, Jaffna.

(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில்)

(793)


## சேவை

ஆங்கிலம் கற்க சிறந்த இடம் — ஜோர்ஜ், வைரவ கோவிலடி, நாவற்குழி. (சந்தி). 791

## கல்வி

G. C. E. (O. L.) கணிதம் 15 வருட அநுபவம்பெற்ற ஆசிரியரினால் ஆரம்ப அறிவிலிருந்து விசேட சித்திக்காக குறைந்தகாலத்தில் வீடுகளிற் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டிக்குழி. 767

G. C. E. (A/L) தூய/பிரயோக கணிதம், சிறப்புப் பட்டதாரி ஆசிரியரினால் கிழமை நாட்களில் மாலை நேரத்திற் கற்பிக்கப்படும். சிறு குழுக்கள் ஒழுங்குசெய்யலாம். இடம்: யாழ்ப்பாணம், சுண்டிக்குளி. மாணவர் தொகை இடம் என்பன குறிப்பிட்டுத் தொடர்புகொள்ளவும். விளம்பர இலக்கம் 663, C/o ஈழநாடு. 663

## வகுப்புக்கள்

Spoken English, English Language 1984 G.C,E. (O/L) பாடத்திட்டத்திற்கு அமைய, சிறப்புப்பட்டதாரி ஆசிரியரினால் கற்பிக்கப்படும். G.C.E. (O/L) மாணவர்கள் பிறநாடு செல்லவிரும்புவோர் உயர் கல்விபயிலும் மாணவர்கள் சேருங்கள். கற்பித்தலில் விசேசமுறை கையாளப்படும். ஆரம்பம் 14-7-84 சனிக்கிழமை 2—4 p.m. ஞாயிற்றுக்கிழமை 3-30—5-30 p.m. காலை வகுப்புக்களும் நடைபெறுகின்றன. யாழ்ப்பாணக் கல்விநிலையம். சாந்தித்தியேட்டருக்கு அருகாமையில், யாழ்ப்பாணம். 789

## பின்னுறுதிக் கட்டளை அறிவித்தல்

**யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்**

யாழ்ப்பாணம் அரசடி வீதி, இல 79 இன் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை சோமசுந்தரம் என்பவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்துக்கள் விடயத்தில்,

மரணமெய்தியவர்

யாழ்ப்பாணம் அரசடி வீதி, இல 79 இன் சோமசுந்தரம் யோகசுந்தரம்

மனுதார்

மரணச் சொத்து நியாயாதிக்கம் இல: 3805

மேற்கூறப்பட்ட மரணமெய்தியவரின் மரணசாதனமில்லா சொத்துக்களை நிருவகிப்பதற்காக மேற்படி இலக்கங்கொண்ட மரணச் சொத்து நியாயாதிக்க வழக்கு தாக்கல் செய்யப்பட்டு பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1984ம் ஆண்டு யூலை மாதம் 13 ந் தேதியன்று முற்பகல் 9 மணிக்கு இவ்வழக்கில் அக்கறையுடையவர் எவரேனும் இம்மன்றில் தோன்றி குறித்த பின்னுறுதிக் கட்டளை முற்றாக்கப்படுவதற்கு எதிராக ஏதேனும் காரணம் இருப்பின் காட்டாவிடில் குறித்த பின்னுறுதிக் கட்டளை முற்றாக்கப்பட்டுள்ளதென பதியப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

நீதிமன்றக் கட்டளைப்படி

**கு. குலசிங்கம்**
பதிவாளர்

1984-06-14 தேதி

784

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## கிருண்ட் சம்பியன் சைக்கிள்

முற்பணம் ரூ. 450/-
மாதா மாதம் ரூ. 84/-

**த பினன்ஸ் கம்பனி லிமிட்டெட**

TFC

249, மின்சார நிலைய விதி,
யாழ்ப்பாணம்-
தொலைபேசி: 23680

**விஸ்வமடுக்குளம் வாலி[illegible] விவசாயத் திட்ட கூட்டுறவுச் சங்கம், விஸ்வமடுக்குளம்**

## வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 25-07-84ம் திகதி நண்பகல் 12 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

1. லொறிச் சாரதி: சம்பள அளவுத்திட்டம் 300—540 / 15X12, 20X3
   வயது: 23 தொடக்கம் 45 வரை
2. லொறி சுத்திகரிப்பாளர்:
   சம்பள அளவுத்திட்டம் 195—345 / 10X10, 12.50X4
   வயது: 23 தொடக்கம் 45 வரை

தகைமைகளுக்கும், அனுபவத்திற்கும் ஏற்ப பொருத்தமான சம்பள அளவுத்திட்டத்தில் தகுந்தபடி நியமிக்கப்படுவர். சம்பளத்துடன் அங்கீகரிக்கப்பட்ட படிகளும் வழங்கப்படும்.

குறிப்பிட்ட தகைமைகள்பற்றிய விபரங்களை நேரடியாக எமது சங்கத்தில் அல்லது ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் அல்லது ஏதாவது ப. நோ. கூ. சங்கத்தின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் யாவும் 'தலைவர், விஸ்வமடுக்குளம், வா. வி. தி. கூ. சங்கம், விஸ்வமடுக்குளம்' என்ற முகவரிக்கு பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைத்தல்வேண்டும்.

**பொதுமுகாமையாளர்**

குறிப்பு: தகுதியற்ற விண்ணப்பங்களும், பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்களும் எதுவித நிபந்தனைகளுமின்றி இரத்துச்செய்யப்படும்.

(792)

## அதிஸ்ட லாபச் சீட்டு முடிவுகள்

அளவெட்டி தவளக்கிரி முத்துமாரி அம்மன் கோவில் தொண்டர் சபையின் அதிஸ்ட லாபச் சீட்டு முடிவுகள்.

| பரிசு | இல. | பரிசு: | இல. |
|---|---|---|---|
| 1-ம் | 3208 | 2-ம் | 2410 |
| 3-ம் | 6082 | 4-ம் | 6195 |
| 5-ம் | 2133 | 6-ம் | 1514 |
| 7-ம் | 3436 | 8-ம் | 794 |
| 9-ம் | 3437 | 10-ம் | 3806 |
| 11-ம் | 3899 | 12-ம் | 5426 |
| 13-ம் | 5811 | 14-ம் | 663 |
| 15-ம் | 195 | 16-ம் | 3816 |
| | | 17-ம் | 5555 |

(786)

## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி இராஜேஸ்வரி சிவராஜா**

மலர்வு:
16 - 5 - 45

உதிர்வு:
22 - 6 - 83

திதி:
10 - 7 - 84

அன்பின் திருவுருவாய், அறிவின் பிறப்பிடமாய், பண்பின் ஒளிச்சுடராய், இனியவளாய், குடும்ப விளக்காய் ஒளிகாட்டி துன்பத்தின் பிரதி வடிவமாக எம்மை வாழவிட்டு மீளாத்துயில் கொண்ட அன்புச் செல்வமே! உங்களைப் பிரிந்து ஓராண்டு நிறைவுற்ற இவ்வேளையில் கண்ணீர் நிறைந்த கண்களுடனும் தாங்கொணாத்துயருடனும் உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
அன்புக் கணவன், பிள்ளைகள்,
பெற்றோர், சகோதர சகோதரிகள்.

6-ம் வட்டாரம்,
மண்டைதீவு.


790

## ஓராண்டு நினைவஞ்சலி

**மரியாம்பிள்ளை பிரன்சீஸ்**

(பருத்தித்துறை பிரபல வர்த்தகரும், பெர்னதேத் றன்ஸ்போட், பருத்தித்துறை இன்டஸ்ரியல் வேக்ஸ் உரிமையாளரும்)

தாயின் மடியில் 10-04-1910 — இறைவன் அடியில் 10-07-1983



மாரியே மாறினாலும்
மாறிடா வாய்மையாளா!

வாரியே பாரிபோல
வழங்கிய நற்றயாளா!

சூரியனன்ன ஈங்கு
சோதியாய் பிரகாசித்தாய்!

சீரிய உந்தனுக்காய்
சுதனையாம் இறைஞ்சு-
கின்றோம்.

எம் அன்புத் தலைவா, இருண்ட இவ்வுலகத்தில் எமக்கு ஒளி விளக்காய் திகழ்ந்த தாங்கள் எம்மை மீண்டும் இருளில் விட்டுவிட்டு இறைவனிடம் சேர்ந்து ஆண்டு ஒன்று ஆகின்றது ஐயா. தங்கள் பிரிவை எண்ணி எண்ணி கண்ணீரும் கவலையும் கொள்கின்றோம். தங்கள் ஒளி என்றும் எம்மில் நீங்கா நினைவாக, நினைவின் நிழலாக துலங்க ஏங்கி உங்கள் பிரிவால் துயருறும் அன்பு உள்ளங்கள்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

''றேஸ் கொட்'',
கடற்கரை வீதி,
பருத்தித்துறை.

772

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா - பாகிஸ்தான் தகவல் துறையில் கூட்டு ஒத்துழைப்பு

## தகவல்துறை அமைச்சர்கள் இணக்கம்

இஸ்லாமபாத் ஜூலை, 9

**இந்தியாவும், பாகிஸ்தானும் தகவல் மற்றும் செய்தித்துறைகளில் கூட்டு ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளன.**

தற்போது பாகிஸ்தானில் தங்கியிருக்கும் இந்திய தகவல் துறை அமைச்சர் எச் கே.எல். பஹத் பாகிஸ்தானிய தகவல் துறை அமைச்சருடன் நடத்திய பேச்சுக்களின்போது இந்த இணக்கம் எற்பட்டது.

இதற்கிணங்க மூன்றுமாதங்களுக்கு ஒருமுறை இருநாட்டினதும் தகவல் துறையைச் சேர்ந்தவர்கள் பரஸ்பரம் ஒவ்வொரு நாட்டுக்கும் நல்லெண்ண விஜயத்தை மேற்கொள்ளவுள்ளனர். இதன் மூலம் இரு நாடுகளிடையேயும் காணப்படும் தகவல் மற்றும் பொதுவான விடயங்களில் உள்ள முட்டுக்கட்டையை நீக்க முடியும் என்று இருநாட்டு அமைச்சர்களும் குறிப்பிட்டுள்ளனர்.

இதன் முதல் கட்டமாக பாகிஸ்தானிய பத்திரிகைத் துறையைச் சேர்ந்த 12 பேர் கொண்ட குழுவை இந்தியாவுக்கு வருமாறு பி. ரி. ஐ. செய்தித்தாபனம் விடுத்துள்ள அழைப்பை பாகிஸ்தான் ஏற்றுக் கொண்டது,

முன்னதாக பாகிஸ்தானிய தகவல்துறை அமைச்சருடன் நடைபெற்ற பேச்சுக்களின் போது "பஞ்சாப் பொற்கோயில் விவகாரத்தை பாகிஸ்தான் பத்திரிகைகளும் ஏனைய தகவல்துறை சாதனங்களும் உண்மைக்குப் புறம்பாக வெளியிட்டுள்ளன. இதனால் இந்தியாவுக்கு ஏற்பட்ட கவலையையும் பஹத் பாகிஸ்தானிய அமைச்சரிடம் தெரிவித்தார்.

உறுதியான பலமான பாகிஸ்தானையே இந்தியா தமது அயல் நாடாக வைத்திருக்க விரும்புகிறது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அணிசேரா இயக்கத்திற்கு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி ஆற்றிவரும் சேவையை பாகிஸ்தானிய தகவல் அமைச்சர் பாராட்டியதுடன் மூன்றும் உலக நாடுகளுக்கென தனியான அமைப்பொன்றை ஆரம்பிப்பதற்கு இந்திராகாந்தி எடுத்து வரும் முயற்சியை ஆதரிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நேற்றுமாலை பஹத் பாகிஸ்தானிய ஜனாதிபதி ஸியாவுல் ஹக் உடன் பேச்சுக்களை நடத்தினார். இருநாடுகளும் உறவுகளை வளர்த்துக் கொள்வதில் தீவிர அக்கறை காட்ட வேண்டும் என்றும் இந்தியாவுடன் நல்லெண்ண அடிப்படையில் நட்பு நாடாகவே பாகிஸ்தான் இருக்க விரும்புகிறது என்று பாகிஸ்தான் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் இந்திராகாந்தி ஜனாதிபதி ஸெயில் சிங் ஆகியோரின் வாழ்த்துச்செய்தியையும் பஹத் பாகிஸ்தான் ஜனாதிபதிக்கு தெரிவித்தார்.

இரு நாடுகளிடையேயும் இணக்கம் காணப்பட்ட தகவல்துறை ஒத்துழைப்பு இரு நாட்டு உறவிலும் சுமுக நிலையை ஏற்படுத்தலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது. (சூ)

### மிட்ரான்ட் ஜோர்தான் விஜயம்

அம்மான் ஜூலை, 9

பிரான்ஸ் ஜனாதிபதி மிட்ரான்ட் 3 நாள் விஜயத்தை மேற்கொண்டு ஜோர்டான் சென்றுள்ளார்.

அவர் அங்கு தங்கியிருக்கும் நாட்களில் மன்னர் ஹசேனுடன் மத்திய கிழக்கு விவகாரம், மற்றும் பொருளாதார வர்த்தக ஒத்துழைப்பு சம்மந்தமான பேச்சு வார்த்தைகளை நடத்துவார்.

இதேவேளை பாலஸ்தீன இயக்கத் தலைவர் யாசீர் அரபாத்தும் ஜோர்டானுக்கு விஜயத்தை மேற்கொண்டுள்ளார். (சூ)

பாராளுமன்றத்திலிருந்து — இ. கந்தசாமி

## அநுரா எழுப்பிய சர்ச்சையும் லலித் அளித்த விளக்கமும்

(நேற்றைய தொடர்ச்சி)

கடற்படைக்கு குறைந்த அளவு நிதியே ஒதுக்கப்பட்டது. என்றும் கூறிய அநுரா முன்னைய ஆண்டுகளில் இந்த அரசு கடற்படைக்கு ஒதுக்கிய நிதியை பட்டியல் போட்டுக் காண்பிக்கிறார்:

1977ல்—1 கோடி 30 லட்சம் 78ல்—1 கோடி 40 லட்சம்,79ல் 3 கோடி 40 லட்சம்,80ல் 6 கோடி 10 லட்சம், 81ல் 7 கோடி 10 லட்சம்,82ல் 5கோடி 40 லட்சம். 83ல் 5 கோடி 30 லட்சம், 84ல் 8கோடி 30லட்சம்.

### லலித்துக்கு பாராட்டு

தேசியபாதுகாப்பு அமைச்சர் பதவிஏற்ற பின்னர் வடக்கு கிழக்கு பயங்கரவாதத்தைகட்டுப்படுத்து தற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார் என்றும் பாராட்டுத தெரிவித்த அனுரா,

### விமானங்களை வாங்குமாறு அனுராஆலோசனை

கடல கண்காணிப்புக்கு 16 கோடி ரூபாவுக்கு மூன்று கப்பல்களை வாங்கும் அதேவேளையில் அதேயளவு பணத்தைக் கொண்டு ஆகாயத்திலிருந்து மேலும் பரந்தபிரதேசத்தைக் கண்காணிக்க கூடிய 7-8 'செஸினா' இரட்டை என்ஜின்களைக் கொண்ட விமானங்களை வாங்கிப் பயன்படுத்தலாமே என்றும் ஆலோசனை கூறினார்.

### பயங்கரவாதிகளை இந்தியாஒப்படைத்தால்.

தமிழ் நாட்டில்உள்ள பயங்கரவாதிகளை இலங்கை அரசிடம் ஒப்படைக்குமாறு கேட்கிறீர்களே! மட்டக்களப்பு சிறையில் ஏனே இரு தடவை களை சிறைமீட்பு இடம் பெற்றன இந்நிலையில் அவர்களை உங்களிடம் ஒப்படைத்தல் சிறைகளில் அவர்களைப் பாதுகாப்பில் உங்களால் வைத்திருக்க முடியுமா? என்றும் கேள்வி எழுப்பிய அனுரா மேலும் அரசாங்கத்தைக் சாடுகிறார்.

நீங்கள் அமைத்த கடல் கண்காணிப்பு வலயத்தின் செயற்பாட்டிலேயே உங்களுக்கு நம்பிக்கை இல்லை மட்டக்களப்பு சிறையிலிருந்து மீட்கப்பட்ட திருமதி நிர்மலா நித்தியானந்தன் கடல் கண்காணிப்பு வலயத்தை மீறியே இந்தியாவுக்கோ, அமெரிக்காவுக்கோ. இங்கிலாந்துக்கோ சென்று விட்டதாகக் கூறப்படுகிறது.

அலன் தம்பதிகள் கடத்தப்பட்ட சமயம் அவர்கள் யாழ்ப்பாணத்திலேயே வைக்கப்பட்டிருந்தும்கூட அவர்கள் இந்தியாவுக்கே கொண்டு செல்லப்பட்டு விட்டனர் என தேசிய பாதுகாப்பு அமைச்சர் கூறினார்.

### கண்காணிப்பு வலயத்தில் நம்பிக்கை இல்லையா?

கண்காணிப்பு வலயத்தை மீறி எவ்வாறு செல்ல முடியும்? உங்களது கண்காணிப்பு வலயத்திலேயே உங்களுக்கு நம்பிக்கை இல்லையா?

அநுராவின் மற்றுமொரு எச்சரிக்கை—

அயர்லாந்தில் இடம்பெறுவது போன்று பயங்கரவாத நடவடிக்கைகள் இப்போது கொழும்புக்கும் பரவிவிட்டது. ஒபரோய் ஹோட்டலில் குண்டு வெடித்துள்ளது. தேசிய பாதுகாப்பு அமைச்சர் நாட்டில் இல்லாத வேளையில் அவரது அலுவலகக் கட்டிடத்தில் குண்டு வைக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பயங்கர செயல்களுக்கு தமிழ் பயங்கரவாதிகளா சிங்கள பயங்கர வாதிகளா காரணம் என்பதை விசாரணை செய்து கண்டுபிடிக்க வேண்டும்.

### பாராளுமன்றத்துக்கும் ஆபத்து வரலாம்

இதேபோன்ற ஆபத்து ஏனைய அரச கட்டிடங்களுக்கும் ஏன் இப்பாராளுமன்றத்துக்குக்கூட ஏற்படலாம். நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

பயங்கரவாதிகள் தொடர்பான இந்திராவுடனான விவகாரத்தில் ஜனாதிபதியும் லலித்தும் கடைப்பிடித்த அணுகுமுறையைப்பாராட்டிய வேளையில் பின்வருமாறு கூறுகிறார். அனுரா

### இந்திரா வேறு கருணாநிதி வேறு

இந்திராவையும் கருணாநிதியையும் இணைத்துப் பேசக் கூடாது. தமிழ்நாட்டையும் மத்திய அரசையும் இணைத்துப் பேசக் கூடாது.

ஜனாதிபதி இந்திய மத்திய அரசையோ திருமதி இந்திரா காந்தியையோ குறை கூறவில்லை. தமிழ்நாட்டைக் கூட

(5ம் பக்கம் பார்க்க)

### ராணுவம் வாபஸ் பெற வேண்டும்

(புதுடில்லி)

"பஞ்சாப் பொற்கோயிலில் தற்போது நிறுத்தப்பட்டிருக்கும் இந்திய இராணுவத்தை விலக்கிக்கொள்ள வேண்டும்" என்று முன்னாள் இந்தியப் பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் இந்திய அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார். (சூ)

விம்பிள்டன்டெனிஸ்

## மக்கென்ரோ மூன்றுவது தடவையாகவும் வெற்றி!

லண்டன் ஜூலை. 9

லண்டனில் நடைபெற்ற விம்பிள்டன் டெனிஸ் ஆண்களுக்கான ஒற்றையர் ஆட்டத்தில் அமெரிக்காவைச் சேர்ந்த ஜோன் மக்கென்ரோ இன்னொரு வீரரான ஜிம்மி கோணரை தோற்கடித்து மூன்றுவது முறையாகவும் சம்பியன் பட்டத்தை தட்டிக் கொண்டார்.

இவர் நேற்று நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் 6—1, 6—1, 6—2 என்ற கணக்கில் வெற்றிபெற்றார்.

ஜூனியர் ஆண்களுக்கான விம்பிள்டன் டெனிஸ் போட்டியில் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த மார்க் காஸ்மன் வெற்றிபெற்றுள்ளார். (சூ)

குரேஸ் சர்வதேச தொலைத்தொடர்பு சேவை
(Cross International Telecommunication Services)

FOR ALL INTERNATIONAL AND LOCAL DIRECT DIALLING TELEPHONE CALLS.

INTERNATIONAL TELEX SERVICES :- NO DELAY AT ALL. CHEAP RATES, CONTACT US RIGHT NOW

குரேஸ் சர்வதேச தொலைத்தொடர்பு சேவை .
(i) சர்வதேச, உள்ளூர் நேரடி தொலைத்தொடர்பு சேவை
(ii) சர்வதேச ரெலெக்ஸ் சேவை.

உலகின் எப்பாகத்திற்கும் குறைந்த கட்டணத்தில் நேரடிச் சர்வதேச தொலைத்தொடர்பு சேவையும், ஒரு நொடிப்பொழுதில் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்

CTS

Cross International Telecommunication Services
STAGE II, FIRST FLOOR, BUS STAND CENTRE ROAD, MODEL MARKET, JAFFNA.
Phone No: 22040, 22065. Telex No: 2207 (C. T. S.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

மடிந்து போகிறவனுக்கு மதுபான போதையையும் மனச்சுவையுள்ளவனுக்கு திராட்சை ரசத்தையும் கொடுங்கள்.

— பைபிள்

## நமது நோக்கு

# பசியே பெருஞ்சவால்

''உலகில் உள்ள 450 கோடி மக்களில் ஐம்பது கோடி பட்டினி வேதனையுடன் படுக்கைக்குப் போகின்றனர். ஒருதுண்டு பாணே இவர்களுக்குத் தெய்வம் என்று மகாத்மா காந்தி சொன்னதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்''.

இவ்வாறு சர்வதேச நெல் ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் நாயகம் கலாநிதி எம். எஸ். சுவாமிநாதன் கொழும்பில் நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில் கூறியிருக்கிறார்.

1974-ல் ரோமாபுரியில் உலகின் உணவு விவசாயத் துறைத் தலைவர்கள் கூடியபோது பத்துவருடங்களில் பசியை உலகிலிருந்து விரட்டி விடுவோமென்று திடசங்கற்பம் செய்திருந்தனர்; போஷாக்கின்மையால், ஆண், பெண், குழந்தை எவரும் தமது வளர்ச்சியும் சிந்தனைத்திறனும் பாதிக்கப்படாத நிலைமையை ஏற்படுத்தியே தீருவோம் என்று சபதம் செய்தனர். பத்துவருடங்களுக்குப்பின் இதனை நிறைவேற்ற முடியாத நிலை ஏமாற்றத்துக்குரியது என்ற கண்டனத்தையும் கலாநிதி சுவாமிநாதன் குறிப்பிடத் தவறவில்லை.

கலாநிதி சுவாமிநாதனின் பெருமையையும் பேராற்றலையும் அறிந்த மக்கள் அவருடைய அறிவுரைக்கு நிச்சயம் ஆழ்ந்த மதிப்பளிப்பார்கள்.

உலகப்புகழ்பெற்ற இலங்கையின் கலாநிதி சிறில் பொன்னம் பெருமா, உலகின் மிகச்சிறந்த விவசாய விஞ்ஞானி கலாநிதி சுவாமிநாதன் என்று வர்ணித்திருக்கிறார் விஞ்ஞான கலாநிதி மட்டுமல்ல, எவ். ஆர். எஸ் (F. R. S.) என்பதும் உலக உணவு விவசாய நிறுவனத்தின் தலைவருமென்பதால் கலாநிதி சுவாமிநாதனின் கருத்துக்கள் இலங்கைக்கு அரிய பொக்கிஷமெனக்கொள்ள வேண்டும்.

கடந்த காலத்தில் நாம் கையாண்டுவரும் நெல் உற்பத்தி முறைகள் தக்க பலனளிக்காதது எதற்காக வென்பதை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

நெல்உற்பத்திஇந்நாட்டில் அதிகரித்துவருவது உண்மையானாலும், இங்கும் பட்டினியால் வாழும் மக்கள் குறைந்தபாடில்லை.

இரண்டாயிரம் ஆண்டுகளாக உலகம் கண்ட விவசாய வளர்ச்சி கடந்த 20 வருடங்களில் மிக வேகமாக அதிகரித்தது; விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் அதற்குக் காரணம். இலங்கையிலேயே கடந்த பத்து வருடங்களில் கணிசமான முன்னேற்றத்துக்கு விஞ்ஞானமுறை உதவியிருக்கிறது.

பட்டினி தொடர்வதற்கு முக்கிய காரணங்கள் என்னவென்பதை விஞ்ஞான நிபுணர்சுவாமிநாதன் தெளிவாக விளக்குகிறார்.

தொழில் தேடி அலையும் இளைஞர் பட்டாளம் கிராமத்தைக் கைவிட்டு நகரங்களில் முகாமிடுகின்றனர்.

மூன்றும் உலகில் வாழும் இன்றைய இளைஞர் இலகுவாகப் பணம் சம்பாதிக்க வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர். கமச்செய்கையில் ஊக்கம் குன்றிவருகிறது; படியாதவர்கள் ஆற்றல் குறைந்தவர்களே நாட்டின் கிராமங்களில் கமஞ் செய்கின்றனர்.

இதன் விளைவு எவ்வாறிருக்குமென்பதை இன்று உணரமுடியாத இளைஞர் கூட்டம் மிக விரைவில் தங்கள் தவறான வழிகளை நினைந்து வருந்தவேண்டிய கட்டம் தவிர்க்கமுடியாதிருக்குமென்கிறார் கலாநிதி சுவாமிநாதன்,

ஜனத்தொகைப் பெருக்கம் உலகளாவிய நிகழ்ச்சியாயிருந்தபோதும்இலங்கை அத்துறையில் பெருஞ்சாதனையை நிலைநாட்டுகிறது. மக்கள் கூட்டம்கூடக்கூட, உணவு உற்பத்தி அந்த அளவிற்கு எட்டாத நிலையில் பட்டினியே எமது தலைவிதியாகவிருக்கப்போகிறது.

குடும்ப நலத் திட்டம் எவ்வாறு அவசியமோ அவ்வளவு அவசியம் உணவு உற்பத்திப்பெருக்கம். நிலவளம், நீர்வளம் என்ற துறைகளில் நாம் பற்றுக்குறை என்ற சாட்டைச் சுமத்திவிடமுடியாது.

வாலிபர்களின் தவறான போக்கு மாறுவதற்கு அனுபவத்தைக் காத்திருத்தல் அபாயமானது. சூடுகண்டபின் நிலைமையைத் திருத்துவது எப்போதும் சாத்தியமாகாது.

விவசாயம் ஒரு கடினமான முயற்சியென்றும், அதன் வருமானம்நிலையற்றதென்றும் நம்பப்படுகிறது. இதுபோன்ற போலி நம்பிக்கை வேறெதுவும் கிடையாதென்கிறார் கலாநிதி சுவாமிநாதன்.

கிராம அபிவிருத்தியில் நெல் உற்பத்தி பல்வேறு தொடர்பான தொழில்களை விருத்திசெய்யமுடியும். இன்றைய இளைஞர்கள் விவசாயத்துறையில் ஏற்பட்டிருக்கும் தொழில்நுட்ப மாற்றங்களை பரிசோதனை முறையில் அறிய முடியுமானல் இத்துறை ஆயிரக்கணக்கானோரை கவரும் என்பதே நிபுணரின் திடமான நம்பிக்கை.

தேசிய ரீதியில் உணவு உற்பத்தி கணிக்கப்படுமானல் இலங்கைதன்னிறைவு காண்பது புதினமாகாது.

# பசி பட்டினி ஒழிப்பு

## போராட்டத்தில் எப்படி வெற்றிபெறலாம்?

### சர்வதேச விவசாய நிபுணர் விளக்கம்

[கொழும்பு]

''கிராமப்புரங்களில் வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னைக்கு ஒரு நல்ல தீர்வுகாண்பதன் மூலமே பசி, பட்டினி ஒழிப்புப் போராட்டத்தில் ஓரளவு நாம் வெற்றியைக்காணலாம்''

இவ்வாறு சர்வதேச அரிசி ஆராய்ச்சி நிலையத்தின் இயக்குநர் நாயகமும் உணவு விவசாயத் தாபனத்தின் பிரதித் தலைவருமான டாக்டர் எம். எஸ். சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மூன்று நாள் விஜயத்தை முடித்துக்கொண்டு செல்கையில் அவர் இந்தக் கருத்தை தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பிரபல விஞ்ஞானியான டாக்டர் சிறில் பொன்னம் பெருமாவினுல் உலகின் அதிசிறந்த விவசாய ஆராய்ச்சியாளரென வர்ணிக்கப்பட்டுள்ள டாக்டர் சுவாமிநாதன் இலங்கையில் தங்கியிருந்த நாட்களில் பெலக்கெலவிலுள்ள தம்பல ஆராய்ச்சி நிலையம், விக்டோரியா அணைக்கட்டு, பேராதனை பல்கலைக் கழகத்தின்விவசாயபீடம்ஆகிய இடங்களுக்கும் வத்தள கொடவிலுள்ள அரிசி ஆராய்ச்சி நிலையத்துக்கும் விஜயம் செய்திருந்தார்.

பேராதனை பல்கலைக்கழகத்தில்விவசாயம் சம்பந்தமான ஆராய்ச்சி உரையொன்றை நிகழ்த்தியிருந்தார் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

இவர் தமது கருத்துரையில் 'கிராம அபிவிருத்தி மிகவும் முக்கியம் என்பதனை சுட்டிக் காட்டியிருந்தார். நகரப்புறங்களுக்கு மக்கள் வேலை தேடிச் செல்வதனை இது தடுக்கும்' என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மூன்றும் உலக நாடுகளில் கிராமப்புற இளைஞர்கள் விவசாயத்தில் ஆர்வம் குன்றிவருவது கவலைக்குரியது. இது பாரதூரமான விளைவுகளைஏற்படுத்தும். விவசாயம், படிக்காதவர்களுக்கு மட்டுமே ஏற்றது என்று நம்பப்படுவது கவலைப் படவேண்டியது என்றும் அவர் தெரிவித்தார்.

ஒவ்வொருநாளும் உலகில் 500 மில்லியன் மக்கள் பசிப் பிணியால் வாடுகின்றார்கள். இந்தப் பிரச்னையை விவசாயத் துறையில் ஒழுங்கமைந்த திட்டங்களை மேற்கொள்வதன் மூலம் தீர்த்துக்கொள்ளலாம். குறிப்பாக அதிக விளைச்சலைத் தரும் உயர்ந்த ரக நெல் இனங்களை பயிரிடுதல், விவசாயத் துறையில் நவீன தொழில் நுட்பங்களை புகுத்துதல், சனத்தொகையை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருத்தல் என்பன மூலம் இந்த பிரச்னைக்கு தீர்வு காணலாம்.

அவர் மேலும் வலியுறுத்திக் குறிப்பிடுகையில் உலகில் 150

(5 ம் பக்கம் பார்க்க)

## திருநெல்வேலி சைவசிறுர் இல்லம்

திருநெல்வேலி சைவ சிறுவர்கள் இல்லத்தின் அவலநிலை பற்றி 5 - 7 - 1984 ''ஈழநாடு'' பத்திரிகையில் படித்தோம்.

அன்றைய தினம் மகேஸ்வர பூசை செய்த பெருமக்களைப் போன்று மற்றவர்களும் காலை உணவு, மதிய போசனம், இராப்போசனம், மாலையில் சிற்றுண்டி போன்றவற்றை வழங்கி வருவதானல் அரசை எதிர்பார்க்கும் நிலைஏற்படாது உண்மையாக ஆத்ம சாந்திக்கு இப்படியான சூழலில் செய்யும் உணவு வழங்கல் மிகவும் உதவும்.

லயன்ஸ்கழகம், றேட்டறிக் கழகம் போன்றன சில உதவிகள் செய்து வருகின்றன. அதேநேரத்தில் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சைவ ஆலயங்களின் முகாமையாளர்கள், தர்மகர்த்தாக்கள், பரிபாலன சபையினர்போன்றோர் தேவைக்கு அதிகமாக பல கட்டிடங்களை நிறுவி பொதுமக்களிடம் இருந்து பெறும் அர்ச்சனை பணத்தை வீண் விரயம் செய்யாமல் இப்படியான நல்ல காரியங்களில் செலவிடலாம்.

## மக்கள் கருத்து

யாழ். சட்டத்தரணிகள் சங்கம் ''தீபாவளி தினத்தை வருடாவருடம் சைவசிறுவர்களுக்கும் உடைகள் வழங்கி கொண்டாடுவது வழமையாகும். இப்படியாக, யாழ். மாவட்டத்தில் இயங்கும் சைவ சங்கங்கள், கழகங்கள், சபைகள் இந்துக்களின் விசேஷ தினங்களில் உணவு, உடை, நூல்கள், அப்பியாசப்புத்தகங்கள் வழங்கி எதிர்கால நலன்களில் கவனம் செலுத்துமாறு சைவச் சிறுவர்களின் மனதை மட்டுமல்ல சைவ உலகத்தின் கவனம் அளைத்தும் யாழ்ப்பாண சைவ நிறுவனங்களின் செயல்பாடுகளில் உன்னிப்பாக இருக்கும்.

''இந்து போட்'' சு. இராசரத்தினம் அவர்களின் சேவைகளை சைவ சிறுவர் இல்ல பிரதான மண்டபத்தில் சென்றதும் சிந்திக்க வைக்கிறது எனவே, இன்றைய யாழ்ப்பாண சூழ்நிலையில் பெரியார்களுக்கு சிலை நிறுவுவது பணத்தை முடக்கும் செயலும் அதே நேரத்தில் சிலைகளை நிறுவி தலைஇல்லாத நிலையில் பார்ப்பது அவர்களை அவமதிக்கும் செயலாகும். நூற்றுண்டு விழா குழுவினர் நிதியை திரட்டி சைவ சிறுவர் இல்லத்துக்கு தளபாடங்கள் கட்டிட புனருத்தாரணம், நிரந்தர வைப்பு வருமானம் போன்றவற்றை ஏற்படுத்துவது தான்மறைந்த பெரியார்களின் கருத்துப்படி ''அன்பு வாழ்வின் உயிர்; பக்தியின் ஆணிவேர்; ஆனந்தத்தின் சிரம்: ஆத்மாவின் தாய்ப் பால்'', என்பதனை உணர்த்தும்.

[illegible]

[[illegible] ''இந்து வாலிபர் சங்கம்'']

## ''மாணவர்களுக்கு ஒற்றுமை வேண்டும்''

(மட்டக்களப்பு)

''மாணவர்கள் மத்தியில் வேற்றுமை இருக்கக் கூடாது. ஒற்றுமை இருக்கவேண்டும் போட்டி இருக்கலாம்–ஆனுல் பொறுமை கூடாது, அதே நேரம் பிரதேச வேற்றுமை வேண்டவே வேண்டாம். இதனுல் எமக்கு இகழ்ச்சியே தவிர மகிழ்ச்சியோ, முன்னேற்றமோ ஒரு போதும் கிடைக்கமாட்டாது.''

இவ்வாறு மட்டக்களப்பு [illegible]

(8ம் பக்கம் பார்க்க)

# நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள்

இலங்கையின் வடபகுதியிலுள்ள யாழ்ப்பாணம் சைவத் தமிழ் மக்கள் மிகவும் நெருங்கி வாழ்ந்து வருகின்ற ஒரு பிரதேசமாகும். யாழ்ப்பாணத்தில் கொக்குவில் என்னும் கிராமத்தில் மிகவும் பழமையான ஒரு ஸ்தலமாக நந்தாவில் அருள்மிகு கற்புலத்து' அம்பாள் ஆலயம் விளங்கியமை குறிப்பிடத்தக்கதாகும். நந்தாவில் 'கற்புலத்தம்மை' எனவும். 'கற்புலத்துக் கண்ணகை, அம்மை எனவும் பழங்காலத்தில் இந்த அம்பாள் ஆலயம் அழைக்கப்பட்டது. 1784ம் ஆண்டுவரை கல்லால் கட்டப்பட்டிருந்ததாகவும், தினமும் இரண்டு நேர பூசையும், கந்தபுராணப்படிப்பும் ஆண்டில் ஜூன் மாதம் 10 நாட்கள் திருவிழாக்களும், அதில் ஒரு நாள் தேர்த்திருவிழாவும் நடந்ததாகவும் குறிப்புகள் உண்டு.

நந்தாவில் வயல்கள் ஒரு பக்கமும் செருக்கப்புலத் தோட்டங்கள் மறுபக்கமுமாய் கொக்குவில்- கோண்டாவில் எல்லையில் அமைந்திருக்கும் இந்த அம்பாள் ஆலயம், மிகவும் இயற்கை வனப்புகளுடன் கூடியமைந்துள்ளது. மூர்த்தி தலம், தீர்த்தம் முறையாக அமைந்து இயற்கை வனப்புகளுடன் காட்சிதரும் இந்த ஆலயத்தின் காலத்தை வரையறுப்பது மிகவும் கஷ்டமாகும் 1919ம்ஆண்டுவரை இரண்டாவது தேரும்' சப்பரமும் சகடை முதலியன திருப்பணிகளும் ஊரவர்களுடைய துணையுடன் உபயகாரர்களால் செய்யப்பட்டதாகவும், 1922ம் ஆண்டு மனோன்மணி அம்மன் திருவுருவம் பிரதிஷ்டை செய்யப்பட்டு கும்பாவிஷேகம் மிகச் சிறப்பாக நடந்ததாகவும் யாழ்ப்பாணத்திலுள்ள அறிஞப் பெருமக்களின் கதாகாலட்சேபம்' சொற்பொழிவுகளுடன் அந்தக்காலத்தில் 63 நாயனுர் குருபூஜைத்தினங்களும் நன்கு கொண்டாடப்பட்டதாகவும் அறிகிறோம். நித்திய, நைமித்திய பூஜைகளும், சிறப்பாக நடந்து வந்தன பிள்ளையாருக்கு ஆலயம் ஏற்கனவே இருந்ததைப் புதுப்பித்ததுடன் முருகன் ஆலயமும் வைரவர் ஆலயமும் நிர்மாணிக்கப்பட்டன, வாகனசாலை ,உள்மண்டபம், வசந்தமண்டபம் எனப் பல திருப்பணிகளும் இக்காலத்தில் செய்யப்பட்டன. 1938ம்ஆண்டளவில் ஒரு பரிபாலன சபையின் கீழ் கொண்டு வந்து ஆலயத்தைச் சிறந்தமுறையில் வளர்க்க முயற்சிகள் செய்து வருகின்றனர். ஆண்டுதோறும் வரும் சைவசமயத்தவருக்குரிய விசேட தினங்கள் நன்கு கொண்டாடப்படுகின்றன. 1966ம் ஆண்டு ஆலயத்துக்கு மிக அழகான சித்திரங்கள் அமைந்த தேரின் வெள்ளோட்டவிழாவும், ஆலய மகா கும்பாபிஷேகமும் சிறப்பாக நடந்தேறின. 1979ம் ஆண்டுஇராஜ கோபுரத் திருப்பணி ஆரம்பிக்கப்பட்டு, இலட்சம் ரூபாவரை செலவிடப்பட்டுள்ளது. முன் மண்டபவேலைகளும், தனித்தனி சுவாமிகளுக்குரியகோயில் புனருத்தாரணங்களும், உள் மண்டபவேலைகளும், தீர்த்த மண்டபவேலைகளும் எதிர்காலத்தில் பல இலட்சரூபா செலவில் நடக்க அம்பாள் திருவுள்ளம் கிட்டும் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இன்று இந்த அருள்மிகு நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்மன் ஆலயத்தில் மூன்று நேரமும் தினமும் நித்திய நைமித்தியப் பூசைகளும் ஆனிப் பௌர்ணமிக்குத் தீர்த்தோற்சவம் வரக்கூடியதான ஒழுங்கில் கொடியேறி, பெருவிழாக்களும் நன்கு நடந்து வருகின்றன. ஆண்டுதோறும் சைவ விஷேட தினங்களும் பௌர்ணமிதோறும் திருவிளக்குப்பூஜைகள், மாங்கல்யபூசை, சகஸ்ரநாம அர்ச்சனைகளுடன் மிகவும் சிறப்புறப் பெண்கள் கூடித் தீபங்களேந்திவரும் காட்சி மிகவும் மகிழ்ச்சி அளிப்பன. ஆண்டுதோறும் இலட்சார்ச்சனையுடன் கூடிய யாகங்களும், சங்காபிஷேகமும் கண்கொள்ளாக் காட்சிகளாகும். ஏராளமான அம்பாள் அடியார்களும், ஆலய தரிசனம் செய்து அருள்மிகு கற்புலத்து மனோன்மணி அம்பாளைத் தரிசனம் செய்து மகிழ்கிறார்கள். இத்திருக்கோயில் மேலும் சிறந்து பொலிந்து விளங்க உலகமாதாவாகிய அம்பாள் திருவருள் புரிவாளாக.

— இ. கந்தையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரூபவாஹினியில் இன்று

மாலை
5-30 சிறுவர் இசை நிகழ்ச்சி (ஆங்கிலம்)
6-00 சிறுவர் தகவல் நிகழ்ச்சி (சிங்களம்)
6-30 'வாடைக் காற்று' உள்ளூர்த்திரைப்படம்
6-55 செய்திகள் (தமிழ்)
7-15 இளைஞர் விவகாரம் (சிங்களம்)
7-45 'கோட்ரெட்' ஒரு தீயணைப்புப்படையின் சாகசங்கள் (ஆங்கிலம்)
8-15 செய்திகள் (சிங்களம்)
8-45 'கோட்ரெட்' (தொடர்ச்சி)
9-00 'டிபரன்ற் ஸ்ரோக்ஸ்) (ஆங்கிலம்)
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
9-50 'பிக்வலி' (ஆங்கிலம்)
10-30 உலகச் செய்திகள்
10-35 பிக்வலி (தொடர்ச்சி)
10-50 நிகழ்ச்சிகள் முடிவு

## இன்றைய வானொலியில்

காலை
5-30 நாதாஞ்சலி
5-35 திருமுறைப் பாடல்— சீர்காழி எஸ். திருஞான சம்பந்தம்
6-00 சைவநற்சிந்தனை
6-05 இஸ்லாமிய நற்சிந்தனை
6-10 அறநெறி ஆரம்
6-25 நிகழ்ச்சி முன்னேட்டம்
6-30 செய்திகள்
6-40 அறிவிப்புகள்
6-50 மெல்லிசைப்பாடல்
6-55 போதி மாதவனின் போதனைகள்
7-00 வீணை-வி. துரைசாமி ஐயங்கார்
7-30 மாகாணச் செய்திகள்
7-35 இசையமுதம்
8-05 வாத்தியமஞ்சரி
8-15 முஸ்லிம் நிகழ்ச்சி
8-45 காலை ஒலிபரப்பு முடிவு

மாலை
6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-15 புராணபோதம்
6-30 மெல்லிசை
6-45 கத்தோலிக்க சிறுவர் நிகழ்ச்சி-மலர்வேந்தன்.
7-00 களத்து மேடு
7-15 முகத்தார் வீட்டில்
7-30 உலகச்செய்திகள்
7-40 நாட்டுப் பாடல்
7-45 குரல்வகை
8-00 முஸ்லிம் நிகழ்ச்சிகள்
9-00 செய்திகள்
9-10 செய்தியின் பின்னணியில்
9-15 அறிவிப்புகள் -பக்திப் பாடல்கள்
9-30 வயலின் ரி. வி. பிச்சையப்பா
10-30 ஒலிபரப்பு முடிவு.

# அநுரா எழுப்பிய

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

குறை கூறவில்லை. தமிழ்நாட்டிலுள்ள சில அரசியல் வாதிகளையே அவர் குறை கூறியிருக்கிறார்.

### அத்தனகல எம்.பியின் கவலை

140 கடல் மைல் நீளத்திற்கு அமைக்கப்பட்டுள்ள கண்காணிப்பு வலையத்தில் 10மைல் தூரத்திற்கு ஒன்றுகவாவது கண்காணிப்பு கப்பல்களை நிறுத்த வேண்டாமா அதற்கு 14 கப்பல்கள் வேண்டுமே எம்மிடம் அவ்வளவு கப்பல்கள் இல்லையே என்பது அத்தனகல லஷ்மனின் கவலை. நாட்டின் பல்லாண்டு காலம்நிலவிவந்த அமைதியும் சமாதானமும் அழிந்து கொண்டேபோகிறது. இதனை மீண்டும் நாம் கட்டி எழுப்பவேண்டும். என்றும கூறிய லஷ்மன்—

ஜனதிபதியின் இந்திய விஜயம் இந்திரா ஜே.ஆர் பேச்சு வார்த்தை ஆகிய விடயங்களையும் மெதுவாகத் தொட்டுப் பார்த்தார்.

ஜனதிபதியின் இந்திய விடயம் குறித்து முழு விபரங்களும் தங்களுக்குக் கிட்டாத படியினல் தாம் அது பற்றி சபையில் விவாதிக்க விரும்பவில்லை என்று அவர் கூறிய போது குறுக்கிட்ட சபாநாயகர்.

அவ்விடயங்கள் பற்றி விவாதிக்க தாம்அனுமதிக்கப் போவதில்லை என்று கூறியதை அடுத்து அவ்விடயத்திற்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது.

எந்தவொரு விவகாரத்தையும் சமாளிக்கத் தெரிந்த லலித் கடல் கண்காணிப்பு வலையம் குறித்து எதிர்க்கட்சியினரின் கண்டனங்களை பின் கண்டவாறு அணுகுகிறார்.

கடல் கண்காணிப்பு வலயம் போதிய பலன் தரவில்லை; அதனுல் எதுவிதநன்மையும் கிடைக்க மாட்டாது என்றுகூறுகிறீர்களே (எதிர்க்கட்சியினர்) வேண்டுமானுல் அந்த வலயத்தை தாண்டிப் பாருங்கள் அதன்பலன் தெரியும்.

யாழ். மீனவர்கள் இந்த வலயத்தினுல் தமக்கு ஏற்படும் கஷ்டம் குறித்து என்னைச் சந்தித்து முறையிட்டுள்ளனர். அவர்களிடம்கேட்டுப்பார்த்தாலும் அந்த வலயத்தின் தன்மை பற்றி அறிந்து கொள்ளலாம். கண்காணிப்பு வலயத்தின் ஸ்திரம் பற்றிய தமது கூற்றுக்கு தமிழக முதல்வரின் கருத்தையும் துணைக்கு அழைத்தார் லலித்.

கடல் காணிப்பு வலயம் காரணமாக பயங்கர வாதிகள் தமிழகத்திற்கு வர முடியாத நிலையில் இருக்கிருர்களென்று எம்.ஜி ஆர் கூட கூறியிருக்கின்றுர்.

எதிலுமே நூற்றுக்கு நூறு பலனை நாம் எதிர்பார்க்க முடியாது என்றும் லலித் கூறியபோது அரசு தரப்பிலிருந்து:

''சீனப் பெருஞ்சுவர்''-
''பெர்லின் சுவர்''-
எனக் குரல்கள் எழுந்தன.

அக்குரல்களையும் அணைத்துக் கொண்ட லலித், சீனப்பெருஞ் சுவரும், பெர்ளின் சுவரும் நூற்றுக்கு நூறு வெற்றியளித்துள்ளதா? என்றும் கேள்வி எழுப்பினுர்.

லலித் மேலும் தொடர்கிருர் இந்தவலயத்தை அமைக்கும் யோசனை எந்த வெளிநாட்டில் இருந்தும் வரவில்லை. எமது நாட்டைச் சேர்ந்த ஒருவரது ஆலோசனையின்படியே நாம் அதனை அமைத்தோம்.

அந்த வலயத்தை நாம் 10, 15 ஆண்டு காலத்துக்கு வைத்திருக்கவேண்டி ஏற்படும். அவ்வலயத்தின் ஆரம்ப கட்டமே இது. இதனை மேலும் விரிவு படுத்தவேண்டியும் ஏற்படும்.

இந்தவலயத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் அதேவேளை ஆகாய மார்க்கமாகவும் கண்காணிப்பு இடம்பெறுகிறது.

### 40 பேர் கொலை அல்லது கைது

இந்தக் கண்காணிப்பு வலயத்தை மீற முயன்ற 40 பேர் கொல்லப்பட்டு அல்லது கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வேளையில் குறுக்கிட்ட அனுராவுக்கும் லலித்துக்கும் இடையில் சிறு வாக்குவாதம்.

அனுரா: இவர்களில் எத்தனைபேர் அப்பாவிகள்?

லலித்: இப்படிக் கேட்பது பயங்கரவாதிகளின் தந்திரம். கண்காணிப்பு வலயத்தை மீறுவது தவறு. அதனை மீறமுயன்றவர்கள் தவறு செய்தவர்கள். கண்காணிப்பு வலயத்தை மீறியவர்கள் எப்படி அப்பாவிகளாக இருக்க முடியும்?

### கண்காணிப்பு வலயம் பயனற்றது

கொழும்பில் இருக்கும் பயங்கரவாதிகளின் செய்திகளைப் பரப்பும் தகவல் சேவையும் இப்படியான கேள்விகளையே எழுப்புகின்றன. கண்காணிப்பு வலயம் பயனற்றது. அதனை வாபஸ்பெறவேண்டும் என்றெல்லாம் அந்த சேவையினர் கூறிவருகின்றனர்.

இந்த வலயத்தைக் கடக்க முயன்றவர்களில் அகப்பட்டவர்கள் கைதுசெய்யப்பட்டனர்; தப்பியோடியவர்கள் சுடப்பட்டனர்.

ஒரு குரல்: ஒப்ரோய் ஹோட்டல் குண்டு வெடிப்பில் காலமான லொலசா அப்பாவி என்று எவரும் கேட்கவில்லையே!

லலித்: கண்காணிப்பு வலயத்தில் சேவையாற்றுவதற்குப் புதிதாக கொள்வனவு செய்துள்ள 3 கப்பல்கள் தற்போது கொழும்பில் உள்ளன. இன்னும் சில வாரங்களில் கண்காணிப்பு வலயத்திற்குச் சென்றுவிடும்.

கண்காணிப்பு வலயத்தில் தாய்க்கப்பல்களும் மகள் கப்பல்களும் சேவையில் ஈடுபடுகின்றன என்றும் லலித் கூறிய போது, ''மகன் கப்பல்கள் இல்லையா?'' என்றெரு குரல் எழுந்து சபையில் சிரிப்பை உண்டாக்கியது.

### வெளிநாட்டினரை அனுமதிக்கமாட்டோம்

பயங்கரவாதிகளுக்கு எதிரானசெயல் நடவடிக்கைகளில் நாம் ஒருபோதும் வெளிநாட்டினரைஈடுபடுத்தமாட்டோம். முற்று முழுதாக எமது படைவீரர்களையே அதில்ஈடுபடுத்துவோம்.

பயங்கரவாத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் எமது வீரர்களுக்குமுன் அனுபவம் இல்லை. இதனுலேயே இதில் அனுபவமுள்ள வெளி நாட்டினரின் ஆலோசனையைப்பெறுகிறோம். வெளிநாட்டினர் எமது வீரர்களுக்கு பயிற்சியையும் வகுப்புக்களையும் மட்டுமே நடத்துகின்றனர்.,

இன்னுமொரு கட்டத்தில் குறுக்கிட்ட அனுரா சவூதி அரேபியா இலங்கைத் தூதுவரை அங்கு அனுப்ப வேண்டாம் என்றுகூறியிருக்கின்றது.

லலித்: அது தவறு அங்கு காலியாகியுள்ள இடத்திற்கு அனுப்ப ஒரு பொருத்தமான ஒருவரைத் தேடவேண்டும். இந்தியாவைவிட்டுவிட்டு இப்போது சவூதியை பிரதிநிதித்துவப்படுத்துகிறீர்களா?

அனுரா: நான் அப்படிச் செய்யவில்லை. நீரும் ஜனதிபதியும்தான் அண்மையில் இந்தியா சென்று வந்தீர்களோ

லக்ஷ்மன்: சவுதி அரேபிய! இலங்கையிலிருந்து தூதுவரை வேண்டாம் என அறிவித்துள்ளதாகவும் குவைத்தும் சவூதி அரேபியாவும் மகாவலி அபிவிருத்தித் திட்டத்திற்கு வழங்க இருந்த உதவியை நிறுத்திவிட்டதாகவும் எமக்குத்தகவல் கிடைத்துள்ளது-

லலித்: சவூதி அரேபியா தூதுவரை அனுப்ப வேண்டாம் என்று கூறிபிருப்பதாக இங்கு தெரிவிக்கப்பட்டது தவறு. மற்றைய விடயத்தை நிதியமைச்சரிடம் கேளுங்கள்.

சபாநாயகரிடம் மீண்டும் ஒரு புகார் வந்தது—

கொழும்பு-கண்டி வீதியில் உள்ள இரு தேயிலைத் தொழிற்சாலைகளில் வெளிநாட்டினருக்கு மட்டுமே தேயிலை விற்பனை செய்யப்படுகிறது அதுவும் உள்ளூர் நாணயத்தைக் கொண்டே அவர்கள் தேயிலையை வாங்குகிறார்கள். ஆனல் உள்ளூர் வாசிகளுக்கு அங்கு தேயிலை விற்கப்படுவதில்லை. எனவே அத்தொழிற்சாலைகளில் உள்ளூர் வாசிகளும் தேயிலைவாங்குவதற்கு தோட்டக் கைத்தொழிலமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எமது பணத்தியேயே வெளிநாட்டாளர் அங்கு தேயிலையை வாங்கும்போது நானே நீரோ அன்றி உள்ளூர் வாசிகளோ எமது நாணயத்தில் அந்த சிறந்தரக தேயிலையை வாங்கி சுவைக்கமுடியாத நிலை உள்ளது எனவே இத்தேயிலையை உள்ளூர்வாசிகளுக்கு ஒருவருக்கு ஒரு கிலோ வீதமாவது வாங்க வழிசெய்ய வேண்டும் என்றும் சபாநாயகர் தோட்டக் கைத்தொழிலமைச்சரைக் கேட்டுக்கொண்டார்.

இது குறித்து உடன் நடவடிக்கை எடுக்கப்படும் அதே வேளையில் எடுக்கப்படும் நடவடிக்கை குறித்து தங்களுக்கும் அறிவிக்கப்படும் என அமைச்சர் பதிலளித்தார்.

## பசி பட்டினி...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

நாடுகள் விவசாயத்துறையில் ஈடுபடுகின்ற போதும் அமெரிக்கா, கனடா. அவுஸ்திரேலியா உட்பட 10 நாடுகளேவிவசாய விளை பொருள்களை ஏற்றுமதி செய்கின்றன என்று குறிப்பிட்டார்.

அமெரிக்காவில் மூன்று சதவீதமான மக்களே விவசாயத் துறையில் நேரடியாக ஈடுபடுகின்றுர்கள். ஆயினும் விவசாயத்துடன்தொடர்புடைய அதனைச் சார்ந்த துறைகளில் 50சதவீதத்தினர்வேலைவாய்ப்புபெற்றுள்ளார்கள்.

கிராமப்புறவிவசாயிகள் விவசாயத்தில் பழமையான முறைகளை கையாளுவதில்தான்விருப்பம் கொள்பவர்கள் என்ற கருத்தை டாகடர் சுவாமிநாதன் மறுத்தார்.

நவீன தொழில்நுட்ப முறைகள் தெரியவரும்போது எல்லா விவசாயிகளும் அதனைக் கட்டாயம் பயன்படுத்தியே தீருவார்கள்என்றும்குறிப்பிட்டார்

விவசாயத்துறையில் அதிக விளைச்சல்தரும் நெல்இனங்களை புகுத்துதல் நவீன தொழில் நுட்ப முறைகளை கையாளுதல் சனத்தொகையை கட்டுப் பாட்டுக்குள் வைத்திருத்தல் ஆகிய வற்றை மூன்றும் உலக நாடுகள் பின்பற்றி வருமாயின் எதிர் காலத்தில் இந்த நாடுகளும் வளமான நாடுகளாக மாறமுடியும்.

இவ்வாறு செய்யப்படுமாயின் விவசாய விஞ்ஞானக் காரணிகள் மிகுதி விளைவுகளை தரும் என்று அவர் குறிப்பிட்டார் [சூ]

# ஓய்வுபெறும் அதிபர் அருட்செல்வி வலன்ரைன்

செய்யும் பணியைச் சிறப்பாகச் செய்வதற்கு, துறவு நிலை ஓர் அரிய வரப்பிரசாதம். இந்தவரப்பிரசாதத்துக்கூடாக முப்பத்தைத்து ஆண்டுகளுக்கும் மேலாகக் கல்விப் பணியாற்றி, தமது அறுபதாவது வயதில், இந்த ஆண்டு ஜூலை மாதம்ஆருந்திகதியுடன் ஓய்வு பெறும் அதிபர் அருட்செல்வி வலன்ரைன் அவர்கள்உண்மையாகவே தமது சேவையில் நிறைவு பெறுகிருர் என்ருல் அது மிகையல்ல. ஆனுலும் அருட்செல்வி அவர்கள் தம் மளவில், தமது பணி இன்னும் பூரணமாய் அமையவில்லையே என்று அங்கலாய்க்கக் கூடுமானுல், அது, அவர்களின் அர்ப்பணிப்பையே வெளிப்படுத்துவதாய் அமையும்.

1949ஆம் ஆண்டில் ஆசிரிராய்த் தம் பணியைத் தொடங்கிய அருட்செல்வி வலன்ரைன் அவர்கள், தம் தூய்மையான சேவையின் காரணமாக, 10ஆண்டுகளின் பின் 4ஆம் தர அதிபராயும் 1973ல், 3ஆம் தர அதிபராயும் பதவி உயர்வு பெற்றமை, அவர் தம் பணியை, ஆளுமையோடு தொடரக் கிடைத்த சந்தர்ப்பமாய் அமைந்தது பத்துக்கு மேற்பட்ட பாடசாலைகளில் அவர் பணி புரிந்தாலும், வவனியா மாவட்டத்தில் உள்ள இறம்பைக் குளம் மகாவித்தியாலயத்திலும் இறுதியாக, யாழ்ப்பாணம் கன்னியர்மட மகாவித்தியாலயத்திலும், அவ்வித்தியாலயங்களின் வளர்ச்சிக்காக அவர் செய்தசேவை மிக உன்னதமானது.

பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றபின், யாழ்ப்பாணம் கன்னியர்மடம் மகாவித்தியாலயத்தைத் திறம்பட நிர்வகித்து வந்த அருட்செல்வி மேரி விக்ரறின் அவர்களின் சேவை, இளவாலைக் கன்னியர் மடத்துக்குத் தேவைப்பட்டதனுல், அவர் அங்கு அழைக்கப்பட, அந்த இடத்துக்கு அருட்செல்வி வலன்ரைன் அழைக்கப்பட்டார். அருட்செல்வி விக்ரறின் கம்பீரமான ஒரு துறவி. வயதில்குறைந்தவரும் கூட, அருட்செல்வி வலன்ரைனே, சற்றே மெலிந்த தோற்றம். வயதானவருமாவார். ஆனுலும், முன்னையவருக்குச் சற்றும் சளைத்தவருமல்லர் என்றும் எல்லோரும் மூக்கில் விரலை வைத்து ஆச்சரியப்படத்தக்கதாகவே தமது சாதனைகளைச்செய்துள்ளார்.

பிள்ளைகளின் நலனிலும் அக்கறை ஆசிரியர்களின் நலனிலும் அக்கறை கத்தோலிக்கப் பிள்ளைகள் என்றில்லாமல் எல்லாமதப்பிள்ளைகளுக்கும் சமீபத்துப்பிள்ளைகள் என்றில்லாமல் தூரத்துப்பிள்ளைகளுக்கும் அனுமதி, குழந்தைகளின் மழலை கேட்டுக் குதூகலம். ஏழைப்பிள்ளைகள் மீது தனிக் கவனம். குடும்பச்சுமைகளைத் தூக்கிக் கொண்டு, பாடசாலைக்குப் பிந்திவருகிற கடமைகளை ஒழுங்காய்க் கவனிக்க முடியாத ஆசிரியைகள் மீது அனுதாபம் - அவர்களது தனிப்பட்ட துயரங்களை அறிந்து அவற்றுக்குப் பரிகாரம்!

இவ்வளவுக்கும் ஊதி விட்டால் பறந்து போகிற உடம்பு பளிச்சென்று மின்னுகின்ற கண்களில் சேவையின் தூய்மையும், திட்டமும் ஆடம்பரத்தைச் சுட்டுப் பொசுக்கும் எளிமை. எச்சந்தர்ப்பத்திலும் எவரோடாயினும் நிதானம் தவருத பேச்சு. இவரால் துறவறம் சிறப்படைந்ததோ என்று எண்ணத்தோன்றும் தியாகவுணர்வு!

புகழையும் படாடோபத்தை விரும்பாதஅருட்செல்வி வலன்ரைன் அவர்கள், குடத்திலிட்ட

(8ம் பக்கம் பார்க்க)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாநகரசபைப் பகுதிஅசௌகரியங்கள்:

# வரியிறுப்பாளர் சங்கம் ஆணையாளருக்குக் கடிதம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபை வரியிறுப்பாளர் சங்கம், யாழ் மாநகரசபைக்குட்பட்ட பகுதியில் பொது மக்கள் எதிர்நோக்கும் கஷ்டங்கள் குறித்து யாழ் மாநகரசபை ஆணையாளரின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளது.

இச்சங்கம் கடந்த மாதம் 26ந் திகதி கூடியது. அப்போது இதன் உறுப்பினர்கள் பலர் தாம் எதிர்நோக்கும் பிரச்னைகளை விளக்கினர். அப்பிரச்னைகளை உள்டளக்கியும், அவற்றினைச் சீர்செய்வதற்கான ஆலோசனைகள் சிலவற்றையும்வழங்கியும்மேற்படி சங்கத்தின் நிர்வாகச் செயலாளர் திரு. வி. எஸ். இராமநாதன், யாழ் மாநகரசபை ஆணையாளருக்குக்கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

மின்சாரவிநியோகம்; வீதி விளக்குகள் அமைப்பு முறை மறுசீரமைக்கப்பட்ட வேண்டியுள்ளது. வீதி மின்கம்பங்களில் உள்ள மின்குமிழ்கள் பல பழுதடைந்துள்ள போதிலும் அவை அகற்றப்பட்டு புதியன போடப்படவில்லை. அத்துடன் மின்சார வயர்களும் சேதமுற்ற நிலையில் உள்ளன. இந்நிலைமை பொதுமக்களுக்குப் பெரும் பாதிப்பையே ஏற்படுத்தும். யாழ் மாநகரசபை மின்விநியோகத்தை கையாள முடியாவிடில் அதனை நாட்டின் ஏனைய பகுதிகள்போன்று மின்சாரசபையிடம் ஒப்படைக்கலாம். அல்லது வெளிநாட்டு நிதியுதவியைச் சீர்திருத்த வேலைகளுக்கெனப் பெறலாம். இது சம்பந்தமாக யாழ் வரியிறுப்பாளர்கள் சங்கம் ஆலோசனை வழங்கத் தயாராகவுள்ளது.

வீதி நிர்மாணம்: கடந்த மழைகாலத்தின் பின்னர் மாநகரசபை வீதிகள் யாவும் மிகவும் சேதமடைந்துள்ளன. வெள்ளநீர் அகன்று பலமாதங்களாகிவிட்ட போதிலும், பொதுமக்கள் பெரிதும் வீதிச் சீர்கேட்டினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வீதிச் சுத்திகரிப்பு: குப்பை கூழங்கள் கணிசமானளவு கொட்டப்படும் இடங்கள் அதிக கவனத்தைப் பெற வேண்டும். அதி நவீன சாதனங்கள் இச்சுத்திகரிப்பு வேலைகளுக்கென வாங்குதல் அவசியமானதாகும். அத்துடன் பொது மக்களுக்கும் குப்பை கூளங்களை வீசுவது பற்றிய அறிவு புகட்டப்படவேண்டும். அவ்வாறு செய்யப்படின் சுற்றுடல் பாதிப்படைவதைத் தடுக்கமுடியும்.

சுற்றுடல் பாதுகாப்பு: நகரின் வெளிப்புறங்களுக்கு தொழிலகங்களை இடமாற்றுவது அவசியமாகும். இதன் மூலம் நகர்ப்புறமக்கள் தேகாரோக்கியத்துடன் இருக்க வசதிகள் அமைத்துக் கொடுக்கலாம். இம்முயற்சிக்கு அரசாங்கத்தின் அல்லது வெளிநாட்டு உதவியை தேவையேற்படும்போது பெறலாம்.

கால்வாய் அமைப்பும், வெள்ள நீர்த்தடுப்பும்: நகர்ப்புறங்களில் உள்ள சிறு குளங்கள் புனரமைப்புச் செய்யப்பட வேண்டும். இதன் மூலம் வெள்ள நீரை இவற்றில் தேங்கச் செய்து வரட்சிற காலத்தில் கிணற்று நீர் குறைக்வடைவதைத் தடுக்கலாம். வீதிக்கால்வாய்களும் திருத்தப்படவேண்டும். தற்போது இக்கால்வாய்கள் பல பழுதடைந்துள்ளன. இதனால் நீர் இவற்றில் தேங்கியிருப்பதுடன், சிலவற்றில் வெள்ளநீர் ஓடமுடியாத நிலையும் உள்ளன. இக்கால்வாய்கள் ஒழுங்கான கவனத்தைப் பெறுதல் அவசியமானதாகும்.

மணிக்கூட்டுக்கோபுரம்:இம் மணிக்கூட்டுக் கோபுரத்தை மீண்டும் இயங்கச் செய்ய இந்தியாவிலிருந்தேனும் நிபுணர்களை அழைத்து ஆவன செய்யவேண்டும். இக்கோபுர மணி விற்பனை செய்யப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. அத்தகைய முயற்சி கைவிடப்படவேண்டும். வரலாற்றுப்பாரம்பரியம் மிக்க இம்மணிக்கூட்டுக் கோபுர மணியை பாதுகாக்க வேண்டியது அவசியமானதாகும்.

# இன்றைய பலன்

மாதம்: ஆனி
திகதி: 10-07-1884
வாரம்: செவ்வாய்
திதி: துவாதசி காலை9-18ன் மேல் திரயோதசி
நக்ஷத்திரம்; அனுசம் காலை 6-29 ன் மேல் கேட்டை.

மேடம்: முன்னேற்றம் தடைப்படும் குறுக்குவழித் தலையீடு குழப்பத்தை ஏற்படுத்தலாம்ஏதேச்சாதிகாரப் போக்கால் சிலரைப் பகைத்துக் கொள்ளவும் நேரிடும் அமைதி நன்று.

இடபம்: மேடைப் பேச்சாளர்களும் நடிகர்களும் பெரும் புகழ் அடைவார்கள் பொருள் வரவிற்கும் இடமுண்டு இல்லத்தில் திருப்திகரமான நிலை தென்படும் அந்தஸ்திலும் முன்னேற்றமுண்டு.

மிதுனம்: உணர்ச்சிமயமான தினம் மனப்போராட்டங்கள் நடைபெறும் உடல் நலமும் பாதிக்கப்படலாம் குடும்பத்தில் ஏற்படும் மோதல்கள் விரக்திமனப்பான்மையை உருவாக்கும்.

கடகம்: புதுமையான எண்ணங்கள் தலைதூக்கும் புதிய அனுபவங்கள் கிடைக்கும் குறிக்கோளில் வெற்றியுண்டு ஆனந்த நிலையானதினம்.

சிங்கம்: மகிழ்ச்சிகரமான குடும்பத்தில் விருந்தினர்கள் வருகையாய் கலகலப்பு ஏற்படும் நீண்டநாள் நண்பர் ஒருவரை மீண்டும் சந்திப்பீர்கள் கணவன் மனைவி உறவு மிகவும் நெருக்கமாகஇருக்கும்.

கன்னி: தூரதேச வாசம் உங்களை துயரத்தில் ஆழ்த்தும் எதிர்பாராத விபத்துக்கும் இடமேற்படலாம் ஆயுதங்களுடன் பழகுபவர்கள் அவதானம் வேண்டும்.

துலாம்: இரக்கசிந்தைமேலிடும் மற்றவர்களுக்கு உதவுவதில் மகிழ்ச்சியடைவீர்கள் வீட்டிலுள்வர்களின்அன்பு தாராளமாக கிடைக்கும். புதுமணத்தம்பதிகளுக்கு அதிஷ்டலாபங்களும் கிடைப்பதற்கு இடமுண்டு.

விருச்சிகம்: இன்று அதிகம் சிந்தனையை தவிர்க்கவும் தொழில்விடயத்தில் ஊக்க மிகுதிமுகன்கூறுவோர் விடயத்தில் முன் எச்சரிக்கையுடனிருக்கவும்.

தனுசு: அன்னியர்கள் சகவாசம் புதிய தலையிடியைத் தோற்றுவிக்கும் இளையசகோதரத்தின் உடல்நலம் பாதிக்கப்படலாம் சிந்தனை அதிகமாகும்.

மகரம்: புதிய தொழில் குறித்து சிந்தனை உருவாகும் கூட்டு வியாபாரத்தால் முன்னேற்றமுண்டு புதுமனை கட்டுவதிலும் சிலரது கவனம் திருப்பப்படலாம் பணபலமும் உண்டு.

கும்பம்: மற்றவர்களின் இன்னல்கள் கண்டு இரக்கம்காட்டுவீர்கள் தாராளகுணத்தின் மூலம் தனமும் செலவாகும் புண்ணிய யாத்திரையுமுண்டு.

மீனம்: இன்று எதிலும் நிச்சயமற்ற நிலை தென்படும். மனதில் விரக்தி மனப்பான்மை தலைதூக்கும் உணர்ச்சிவசப்படுவதால் வேண்டாத விளைவுகள் உருவாகும் அடக்கம் நன்று.

திருமலை
வே. ரவீந்திரன்

## கல்விச் சேவையில் இளைஞர்க்கு இடம் வேண்டும்

(பச்சிலைப்பள்ளி)

''கல்விச் சேவையில் இளம் சமுதாயத்தினருக்கு இடமளிக்கப்பட வேண்டும். இளம் சமுதாயத்தினரால் கிளிநொச்சி மாவட்டம் போன்ற பின்தங்கிய பகுதிகளை முன்னேற்றமுடியும்.''

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட கல்விப் பணிப்பாளர் ஜனாப். எம்.எம். மன்சூர் கல்வி அதிகாரியாகப் பதவி உயர்வு பெற்ற திரு. அ. தங்கராசாவுக்கு பளை மகாவித்தியாலய ஆசிரியர் சங்கத்தினால் வழங்கப்பட்ட மதிய போசன விருந்துபசாரத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது கூறினர்.

இவ் வைபவம் பளை மகா வித்தியாலயஅதிபர் திரு. ஏ பி செல்லையா அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

# பருப்பில் கொள்ளைலாபம் அபராதமும் சிறையும்!

[யாழ்ப்பாணம்]

மைசூர்ப்பருப்பில் கொள்ளைலாபம் அடித்த வர்த்தகர் ஒருவருக்கு 1250 ரூபா அபராதமும், 5 வருடம் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது

இவ்வழக்கு யாழ். நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது

இவ் வழக்கில் 4 ரூபா50 சதம் விற்கவேண்டிய 550 கிறும் மைசூர் பருப்பை 6 ரூபா வாக விற்றதாக நல்லூரை சேர்ந்த வர்த்தகர் ஒருவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

# சங்கச் செய்திகள்

[வண்ணார்பண்ணை]

மண்டைதீவு கிழக்கு கிராம அபிவிருத்திச்சங்கத்தின் நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்; திரு. அ. ஜெயகுணதிலகம், செயலாளர்: திரு.வீ. மாணிக்கவாசகர், பொருளாளர்: திரு. ச. தனபாலசிங்கம். 9 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

0 0 0

[கரவெட்டி]

கீழ்கரவை இந்து இளைஞர் மன்ற புதிய நிர்வாக சபைத் தெரிவின்போது பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவாகினர்.

போஷகர்கள்; க.கனகராஜா சி. நடேசன், தலைவர்: கீ. சிவநேசன், செயலாளர்: ஆ. சூரியகுமாரன், பொருளாளர்: க. பரிபாலசிங்கம்

0 0 0

[வண்ணார்பண்ணை]

வேலணை கிழக்கு மாதர் கிராம அபிவிருத்திச்சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இச்சங்கத்தின் தலைவி திருமதி தி. பத்மாவதி தலைமையில் நடைபெற்றது.

திருமதி தி. பத்மாவதி இச்சங்கத்தின் தலைவியாகத்தெரிவு செய்யப்பட்டார். செயலாளராக செல்வி நா. இஞ்சிதமலரும், பொருளாளராக செல்வி ரஜனி தம்புவும் தெரியப்பட்டனர். உபதலைவியாக திருமதி யோ. இராசலிங்கமும், உபசெயலாளராகசெல்வி வசந்தா பொன்னுதுரையும் தெரியப்பட்டனர். 7 பேர் கொண்ட செயற்குழூவும்தெரியப்பட்டது

0 0 0

[பண்டத்தரிப்பு]

மாதகல் மேற்கு சன சமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. வ. கந்தசாமி உபதலைவர்: திரு. அ. கோணேஸ்வரன், செயலாளர்: திரு த. சிறிச்சந்திரன், உபசெயலாளர் திரு.க. கணேசமூர்த்தி, பொருளாளர்: திரு. ஆ. மோகனராசா. செயற்குழு உறுப்பினர்களாக 8 பேர் தெரிவாகினர்.

0 0 0

[புங்குடுதீவு]

புங்குடுதீவு கிழக்கு முன்னாள் கிராமஅபிவிருத்திச்சபைக் கட்டிடத்தில் இயங்கிவரும் 'சக்தி அறிவக'த்தின் நடப்பு வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்; நா. மகாலிங்கம், உபதலைவர்: வை. நவரெத்தினலிங்கம், செயலாளர்: சி. பிறேம் ஆனந்தன். உபசெயலாளர்: ந. குமரசிறி, பொருளாளர்: செ. மோகனசுந்தரம்

## வருடாந்த விருந்து!

(வேலணை)

வேலணை சேர்.வையித்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகாவித்தியாலய உயர்தர மாணவர் ஒன்றியத்தின் வருடாந்த மத்திய போசன விருந்துபசார வைபவம் ஒன்றியத்தின் தலைவர் செல்வன் கு. மாயகேகர் தலைமையில் நடைபெற்றது.

இவ் விருந்துபசார வைபவத்தில் பிரதம விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவனும் வேலணை உதவி அரசாங்க அதிபருமான திரு. சி. சடாச்சரசண்முகதாஸ் கலந்து கொண்டார்.

## மதியுரைக் குழு அங்குரார்ப்பணம்

(நெடுந்தீவு)

''அரசாங்கத் திணைக்களங்களெல்லாம் பொது மக்கள் நன்மைக்காகவும் வசதிக்காகவும் ஏற்படுத்தப் பட்டவையே அல்லாமல் அங்கு பணிபுரியும் ஊழியர்களுக்காக ஏற்படுத்தப் பட்டவையல்ல இவற்றை நன்கு அறிந்து திணைக்களங்களில் ஏற்படும் குறைகளைத் தீர்க்க நீங்களே வழி தேடிக் கொள்ளல் வேண்டும் இதற்காகவே இன்று இந்தக் கூட்டம் ஏற்பட்டது'' இவ்வாறு நெடுந்தீவு அஞ்சல் அலுவலக மதியுரைக் குழு அங்குரார்ப்பணக் கூட்டத்தில் நெடுந்தீவு அஞ்சல் அதிபர் திரு.எஸ். சிவப்பிரகாசம் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

இந்த மதியுரைக் குழு இங்கு மாத்திரமல்ல இலங்கை முழுவதுமே இம் மாதத்தில்இருந்து செயற்படுத்தப் பட்டிருக்கின்றது. அவ்வப் பகுதியில் அஞ்சல் சேவையால் ஏற்படும் கஷ்டங்களை எவ்வாறு தீர்த்து சிறந்த சேவையை ஆற்றமுடியும் என்பவற்றிற்கு வழிகண்டு அவற்றைச் செயற்படுத்துவதற்கு அஞ்சல் அதிபருக்கு ஆலோசனை வழங்குவதே அதன் நோக்கம் என்றார்.

அஞ்சல் அதிபரைத் தலைவராகவும், உபஅஞ்சல் அதிபரைச் செயலாளராகவும் கொண்ட ஏழு பேர் அமைப்புக்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

WANTED

TELEPHONE, TELEX AND COMPUTER OPERATER

புதன்கிழமை காலை (11-07-84) 10 — 11 மணிக்கு இடையில்
நேர்முகப்பரீட்சை நடைபெறும்.
விரும்புவோர் சான்றிதழ்களுடன் சமுகமளிக்கவும்.

Cross International Telecommunication Services

STAGE II. 1 st FLOOR, No. 5, MODEL MARKET,
BUS STAND CENTRE ROAD, JAFFNA.
Phone No: 22040, 22065 TELEX No: 2207 (C. I. S) CE




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருடாந்தக் கூட்டம்
(நெடுந்தீவு)

அஞ்சல் தொலைத் தொடர்புச் சேவையாளர் சங்கத்தின் இருபத்தேழாவது வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 22ம் திகதி காலை அஞ்சலக தபால் தரம் பிரிக்கும் மண்டபத்தில் நடைபெறவுள்ளது இதற்கான சகல ஏற்பாடுகளையும் அதன் செயலாளர் திரு.எஸ்.ஏ.ஆர் தேவநாயகம் செய்துள்ளார்.


**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி -சரோஜாதேவி
**இருவர் உள்ளம்**

**மனோகரா** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
முத்துராமன்-ஜெயந்தி
**ஷண்முகப்பிரியா**
(புதிய பிரதி)

**சாந்தி** (யாழ். நகர்)
10-30, 2-30, 6-30
ராஜன்-புஷ்பலதா
**பால்குடம்**
(புதிய பிரதி)

**வின்சர்** (யாழ். நகர்
தினசரி 10-30, 2-00, 4-30
7-00
DEATH TRAP
13-7-84 முதல் நீங்கள்
ஆவலுடன் எதிர்பார்த்த
I THE JURY

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00
4-30, 7-00
HAPPY HOOKER GOES
HOLLYWOOD
(Strictly for Adults)

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30,6-15
சிவாஜி - மஞ்சுளா .
**உத்தமன்**
(புதிய பிரதி)

**ஹரன்** (யாழ்.நகர்)
தினசரி 10-30, 2-30,6-15
ஜெய்சங்கர் - ஜெயசித்திரா
அசோகன்-V.S.ராகவன்
**பணக்காரப் பெண்**
(புதிய பிரதி)
வருகிறது
LADY CHATTERLEY'S
COVER

**றீகல்** (யாழ். நகர்)
7th to 13th
10-30, 2-15, 4-30, 6-30
Roger Moore as
James Bond 007
in
"MOON RAKER"
Action-packed
Bond Adventure
நுட்பமானஅதிநவீனரக
ஆயுதங்களுடன்
ஜேம்ஸ் பொன்ட்

**லிடோ** யாழ். நகர்
தினசரி 10-30, 2-30, 4-45
7-00
FORCE FIVE
International Karate
(Color)

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
10-30,2-15, 4-30, 7-00
Charlet Heston
நடித்த
பல கோடி ரூபா செலவில்
தயாரிக்கப்பட்ட
EARTH QUACK
[சினிமாஸ்கோப்]
Full Suspense


## பின்னுறுதிக் கட்டளை அறிவித்தல்

### சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம்

கொடிகாமம் அல்லாரை வடக்கு காலஞ் சென்ற சின்னத்தம்பி கந்தன் அல்லது கந்தர் என்பவரின் மரணசாதனமற்றமரணச் சொத்துக்களின் விடயம் சம்பந்தமாக,

மரணமெய்தியவர்

கந்தர் அல்லது கந்தன் சீலரத்தினம் அல்லாரை வடக்கு, கொடிகாமம்

மனுதார்

தத்துவ வழக்கு இல: 217

எதிராக

கந்தன் கணபதி அல்லாரை வடக்கு, கொடிகாமம்.

எதிர்வாதி

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே குறிக்கப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு மேற் கூறிய மனு 1984ம் ஆண்டு பங்குனி மாதம் 19ம் திகதி பதில் மாவட்ட நீதிபதி உயர் திரு எம். சு.கந்தசாமி முன்னிலையில் எடுபட்டு மேற்கூறிய மனுதார் மரணமெய்தியவரின் சொத்தை நிருவகிப்பதற்கும் மரணமெய்தியவரின் சொத்தைப் பரிபாலனம் செய்வதற்கும் தகுதி உடையவரென இந் நீதிமன்றம் காண்பதால்:

மேற்கூறிய மனுதாரை மரணமெய்தியவரின் சொத்துக்களை நிருவகிப்பதற்கு மேற்கூறிய எதிர்வாதி அல்லது அச்சொத்தில் அக்கறையுள்ளவர் எவரும் 1984ம் ஆண்டு வைகாசி மாதம் 9ந் திகதி முற்பகல் 9மணிக்கு இந் நீதிமன்றத்தில் வெளிப்பட்டு இந்தப் பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்ருன தாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றூர்.

1984ம் ஆண்டு பங்குனி மாதம் 19ம் திகதி

**ஆ.குணநாயகம்**
பதிவாளர்
மா. நீ சாவகச்சேரி

தயாரித்தவர்
**செ.பாலகிருஷ்ணன்**
மனுதாரின் சட்டத்தரணி

மறுதவணை 20-6-84
**ஆ.குணநாயகம்**
பதிவாளர்
மறுதவணை 18-7-84
**ஆ.குணநாயகம்**
783

## சேரன் வெற்றி
(ஊரெழு)

ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி அண்மையில் நடைபெற்றது. வித்தியாலய அதிபர் திரு. வீ. த. திருநாவுக்கரசு தலைமையில் நடை பெற்ற இந்த வைபவத்தில் வடமாநில மேலதிகக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. முருகையன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு, போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கினுர்.

வட மாநில சித்திரக் கல்வி அதிகாரி திரு. ஆ. தம்பித்துரை, முன்னுள் மானிப்பாய் எம்.பி. தர்மலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

இப் போட்டியில் சேரன் இல்லம், சோழன் இல்லம், பாண்டியன் இல்லம் என்பன முறையே முதலாம், இரண்டாம், மூன்ரும் இடங்களைப் பெற்றன.

## மூதாட்டியை யானை தாக்கியது

[வவனியா]

யானைதாக்கியதால் 65வயது மூதாட்டி படுகாயத்துடன் வவனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சிதம்பரபுரம் என்ற இடத்தைச் சேர்ந்த சொணுச்சி என்ற மூதாட்டியையே காட்டு யானை தாக்கியுள்ளது.

அத்துடன் இவர் தங்கியிருந்த குடிசையும் யானையினுல் அடித்து நொருக்கப்பட்டதாம்

காயத்துடன் வவனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள மூதாட்டி ஆபத்தான நிலையில் உள்ளார் என ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன

## இலவச பால்மா
(பண்டத்தரிப்பு)

சுழிபுரம் காட்டுப் புலத்தில் தொழு நோயினுல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு யாழ்.செஞ்சிலுவை சங்கத்தினர் சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி வியோ கழகத்தின் ஊடாக மாதம் இரு தடவைகள் இலவச பால் மாவை வழங்கி வருகின்றனர். காட்டுப்புலம் சிறுவர் பாடசாலைக் கட்டிடத்தில் வைத்து இந்த பால்மா இருவாரங்களுக்கு ஒரு தடவை வழங்கப்பட்டு வருகின்றது.

## வழக்கம்பரை தேர்
(சுழிபுரம்)

வழக்கம்பரை அம்மன் கோவில் தேர்த்திருவிழா இம் மாதம் 11ம்திகதி புதன்கிழமை பகல் நடைபெறும்1.ம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமான அம்மன் கோவில் திருவிழா 12ம் திகதி தீர்த்தத்திருவிழாவுடன் நிறைவுறும் 14ம் திகதி சனிக்கிழமை பூங்காவனத் திருவிழாவும் நடைபெறும். (ப)


கலர் பிலிம் சுருள்களை Processing & Printing, 24 படங்களுக்குக் குறையாது செய்து கொண்டால், ஒரு கலர் பிலிம் சுருள் இனமாக வழங்கப்படும், Processing ரூபா 30/- Printing. P.C ஒருபிரதி ரூபா 6.50,

**கொழும்பு ஸ்ருடியோ**


## ஓராண்டு நினைவஞ்சலி
### சுந்தரம்பிள்ளை இரட்ணசபாபதி

தோற்றம்: 29-12-1934 மறைவு: 22-6-1983



கொய்யாத்தோட்டத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை இரட்ணசபாபதி அவர்களின் முதலாண்டு நினைவஞ்சலியையொட்டி அவருடைய ஆன்மா சஞ்சல மற்று இறைவனிடம் பூரண சரணுகதியடைய மனம் நெகிழ்ந்துபிரார்த்திக்கிறேம். ஆருத் துயரில் எம்மை விட்டு மீளாத் துயில் கொண்ட அமரனின் நினைவஞ்சலியில் கலந்து கொள்ளுமாறு உற்ருர், உறவினர், நண்பர்களைத் தாழ்மையுடன் வேண்டுகிறேம்.

நன்றி

இங்ஙனம்
புது வீதி, மனைவி, மக்கள், மருமக்கள்
கொய்யாத்தோட்டம். 753

## 31-வது நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியட்டி அழைப்பும்

### திருமதி புனிதமலர் (ராணி) ஜெகநாதன்

மலர்ந்தது: 20-10-1954 உதிர்ந்தது: 11-06-1984



அன்பின் திருவுருவாய் பாசத்தின் உறைவிடமாய், குடும்பத்தின் ஒளி விளக்காய் இருந்து திடீரென அணைந்துவிட்ட சுடரே! எம்மையெல்லாம் என்றென்றும் ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு தெய்வத்துடன் சங்கமமான தெய்வமே! நீங்கள் மறைந்து 31 நாட்களானுலும், வாழ்ந்த சொற்பகாலங்களின் இனிய நினைவுகளை மறக்க முடியாது தவிக்கின்றேம். உங்கள் ஆத்மா சாந்தியடையஇறைவனைப்பிரார்த்திக்கின்றேம்.

11-06-1984ல் எம் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும், அனுதாபச்செய்திகள் அனுப்பியவர்களுக்கும், எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, 11-07-1984 புதன்கிழமை காலை 7-00 மணிக்கு தொண்டைமானுறு கோணேசர் மடத்தில் நடைபெறும் அந்தியேட்டிக்கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேம்.

இங்ஙனம்
கணவன்: ஜெகநாதன் கி. சே,
சகோதரன்: தி. ராஜசிங்கம்,
பிள்ளைகள், உறவினர்.
தொண்டமானுறு. 748

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வட்டுக்கோட்டை, அராலி வடக்கு கந்தர், ரூமனுஸ் கந்தர்
வழக்காளி
எதிராக

இல. ஈடு 15081

யாழ்ப்பாணம் கொட்டடி தற்போது முத்தமிழ் வீதி, 3-ம் ஒழுங்கை, பீச் ரோட், கொட்டடி யாழ்ப்பாணம்.

1. ஆறுமுகம் கந்தசாமியும்
2. பெண் சிவயோகமும்
3. கந்தையா தவராசாவும்
4. பெண் இராசலட்சுமியும்
5. வேலு இளையவன் கைம்பெண் வள்ளிப்பிள்ளையும்

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் ஈடு/15081 ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகள் 1984ஆம் ஆண்டு ஜுலை [ஆடி] மாதம் 17ஆம் திகதி [17-7-84] செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் முறையே அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபாய் 6855/-ம் இதில் ரூபாய் 6000/-க்கு 24-10-75 திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100க்கு 18வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 640-70 சதம் இதில் கோட்டுச் செலவில் ரூபா 500/-ம் மேலும் தீர்வையில் ரூபா 2000/- கொடுபட்டது

### காணிகளின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணர்பண்ணைக் கோவிற்பற்று வண்ணர்பண்ணை தென்மேற்கு இறை 'பள்ளுவிலி தோட்டம்' தெற்குப் பக்கமாக நெற்பரப்பு 1½ம் அதைச் சேர்ந்தவைகளும் இதற்கு எல்லை கிழக்கு ஒழுங்கை. வடக்கு கொத்தன் செல்லனுக்கும் மறுபேறுக்கும் உரிய தென்பகுதி ஆதனம். மேற்கு ஒழுங்கை. தெற்கு ஆறுமுகம் கந்தையா பெண் சிவயோகத்தின் ஆதனம். இதடங்கலும்.
2. மேற்படி இறை "பள்ளுவில் தோட்டம்" நெற்பரப்பு [3ம்] அதைச் சேர்ந்தவைகளும். இதற்கு எல்லை கிழக்கும் மேற்கும் ஒழுங்கைகள். வடக்கு சின்னப்பொடியன் நாகனுக்கும் பெண் சிதம்பரத்திற்கும் உரிய ஆதனம். தெற்கு ஆறுமுகம் கந்தசாமி பெண் சிவயோகத்தினுதனம் இதடங்கலும்.

தெல்லிப்பழை
25-5-1984

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்
796

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நீர்வேலி ப. நோ. கூ. சங்கத்தில்

# கொள்ளையடிக்க முயன்ற நபரை மடக்கிப் பிடித்தனர்!

(யாழ்ப்பாணம்)

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் விற்பனை நிலையத்தில் கொள்ளை அடிக்க முயன்றஇருவரில் ஒருவரை விற்பனை நிலைய முகாமையாளரும் விற்பனையாளரும் மடக்கிப் பிடித்தனர்.

நீர்வேலியில் அமைந்துள்ள வலி.கிழக்கு தென்பகுதி ப. நோ.கூ.சங்கத்தின் கோப்பாய் வடக்கு விற்பனை நிலையத்தில் இச் சம்பவம் நடைபெற்றது.

மானிப்பாயைச் சேர்ந்த பி. சுரேஷ் என்பவரே சந்தேகத்தின் பேரில் பிடி பட்டவராவார்.

மேற்படி விற்பனை நிலையத்தில் முகாமையாளராக வி. தேவராசாவும் விற்பனையாளராக க.சிவபாலன் என்பவரும் விற்பனை முடிந்து கணக்குப் பார்த்துக் கொண்டிருந்ததாகவும் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் திடீரென விற்பனைப் பணத்தை ஆயுதமுனையில் கொள்ளை அடிக்க முயன்ற போது அவர்களை மடக்கி பிடிக்க மற்ற இருவரும் முயற்சித்த போது ஒருவர் பிடிபட்டதாகவும் ஒருவர் மோட்டார் சைக்கிளில் தப்பியோடிவிட்டதாகவும் சுன்னுகம் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

பொலிசார் நடத்திய விசாரணையின் போது, கொள்ளை அடிக்க முயற்சித்தவர்கள்வந்த மோட்டார் சைக்கிள் அளவெட்டியில் களவாடப் பட்டதென்றும் வைத்திருந்த துப்பாக்கி போலியான தென்றும் தெரியவந்துள்ளது.

கொள்ளைமுயற்சியைத்தடுத்ததுடன் கொள்ளையர்களில் ஒருவரை பிடித்தும், சங்கப் பணத்தையும், பொருட்களைக் காப்பாற்றியமுகாமையாளருக்கும் விற்பனையாளருக்கும்சண்மானம் வழங்க சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பிடிபட்ட சந்தேக நபர் சுன்னுகம் பொலிசார் மூலம் மல்லாகம்நீதிமன்றத்தில்ஆஜர் செய்யப்பட்டு, றிமாண்டில் வைக்கப் பட்டுள்ளார். (மா)

## படகுகளில் அளவுக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்றிச் செல்லக் கூடாது. பெருமளவு பொதிகளை ஏற்றிச் செல்லும் போது பிரயாணிகளையும் ஏற்றிச் செல்லக் கூடாது,''

'சட்டத்தையும் ஒழுங்கையும் யாத்திரியர்களின் நலனையும் கவனிப்பதற்காக கடமையில் ஈடுபட்டுள்ள அரசாங்க அலுவலர்களதும் அனுமதி பெற்ற தொண்டர்களினதும் அறிவுரைசுள் கட்டளைகள் என்பவற்றை ஏற்று நடந்து கொள்ள வேண்டும்.'

## நயினை அம்மன் யாத்திரை ஏற்பாடுகள்

[யாழ்ப்பாணம்]

நயினுதீவு நாகபூஷணி அம்பாள் ஆலயத்துக்குப் புங்குடுதிவு இறுப்பிட்டித்துறைமுகம் ஊடாக யாத்திரை செய்யும் அடியார்களுக்கு தங்குமிடம், சுகாதார சேவை, ஒலி ஒளி அமைப்பு, விசேட மோட்டார் படகுச் சேவை, தனியார் இ. போ. ச. பஸ்சேவைகள், பாதுகாப்பு ஏற்பாடுகள் என்பன தகுந்த வகையில் செய்யப்பட்டுள்ளன.

புங்குடுதீவு மக்கள் சேவா சங்கத்தினரும், இறுப்பிட்டி ஐங்கரன் சனசமூக நிலையத்தினரும் கூட்டாக இவ்வேற்பாடுகளைச் செய்துள்ளனர். [கி]

## உரும்பராய் கற்பகவிநாயகர் ரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

உரும்பராய் ஓடயம்பதி கற்பகவிநாயகர்ஆலய ரதோற்சவம் நாளை புதன்கிழமை நண்பகல் நடைபெறுகிறது. வியாழக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெற்று வெள்ளிக்கிழமை பூங்காவனமும் நடைபெற்று இவ்வருட உற்சவம் முடிவடைகிறது.

## மாணவர்களுக்கு..

(4ம் பக்கத் தொடர்ச்சி)

மெதடிஸ்த மத்திய கல்லூரி வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராககலந்துகொண்ட மாவட்ட சுகாதார அத்தியட்சகர் டாக்டர் வேலும்மயிலும்தனது உரையில் குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் திரு பிரின்ஸ் காசிநாதர் தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

# மே. ஜெர்மன் இளம் பெண் கொலைவழக்கில்எதிரிவிடுதலை!

[திருகோணமலை]

திருகோணமலை சுற்றுமேல் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்ட மேற்கு-ஜெர்மனைச் சேர்ந்த இளம்பெண்ணுை உல்லாசப்பயணியின் கொலைவழக்கில் எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

இவ்வழக்கு மட்டக்களப்பு மேல்நீதிமன்ற நீதிபதி திரு. கி. பாலகிட்ணர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது. எதிரி சார்பில் சட்டத்தரணி திரு. க. பாலசிங்கம் ஆஜராகியிருந்தார். அரசதரப்பில் கே. வி. எஸ். ஸ்ரீஸ்கந்தராசா ஆஜராளுர்.

19*1ம் ஆண்டு நவம்பர் 20-ம் திகதி கும்புறுப்பிட்டி என்ற இடத்திலுள்ள உல்லாசப்பயணிகள் விடுதியொன்றில் 21 வயதான மேற்கு ஜெர்மனைச் சேர்ந்த எலன் ஜுட்டா என்ற பெண் உல்லாசப் பயணியை அதே நாட்டைச் சேர்ந்த வோல்ட்டர் கெய்கன் என்பவர் கொலை செய்ததாகக் குற்றம்சாட்டப் பட்டிருந்தது.

கடந்த வாரம் தொடர்ந்து ஐந்து தினங்களாக ஆங்கிலம் பேசும் ஜுரர்கள் முன்னிலையில் இவ்வழக்கு இடம்பெற்றது. விசாரணை முடிவில் ஜுரர்கள் எதிரி நிரபராதி எனத் தெரிவித்ததையடுத்து நீதிபதி அவரை விடுதலை செய்தார்.

எதிரியான வோல்ட்டர் செய்சன் கடந்த மூன்று வருடங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். இவரின் நலனைக் கவனிக்கவென மே. ஜேர்மன் தூதரகத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவரும் வழக்கு விசாரணைக்கெடுக்கப் பட்டபோது திருகோணமலையில தங்கியிருந்தார்.

எதிரி விடுதலை செய்யப்பட்டதும் அவரை அவ்வதிகாரி உடனடியாகக் கொழும்புக்கு அழைத்துச் சென்ருர். (கி)

## கடத்தப்பட்ட—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வான் நல்லூர் கைலாயபிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த திரு. ஏ. என். திருக்குமானுக்கு சொந்தமானது.

## யாழ். பல்கலைக்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விழா நடைறெும்.

இம்முறை பல்கலைக்கழக வேந்தர், துணைவேந்தர் ஆகியோரின் சிறப்புரைகளும் இடம்பெறமாட்டாது.

பட்டப்படிப்பை முடித்துக் கொண்ட பட்டதாரிதள், உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் தாமதியாமல் உத்தியோகங்களைப் பெற்றுக்கொள்வதற்கு வசதியாகவே ஆடம்பரமற்றமுறையில் நடைபெறும் இப்பட்டமளிப்பு விழாவில் பட்டங்களைப்பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (க

## ஓய்வுபெறும்...

(1-ம பக்கத் தொடர்ச்சி)

விளக்கு; புடமிடப்படாத தங்கம்,பட்டைதீட்டாத வைரம். இவைவெறும் புகழாரங்களல்ல. இந்த விதப்புரையுடன் அவர்களது புகைப்படமொன்றைப் பிரசுரிக்க இயலாத கையறு நிலையே இதற்குச் சான்று!

பாடசாலைக்கு வெளியே, மன நிறைவோடு தமது சேவையை விஸ்தரிக்கச் செல்லும் அருட்செல்விக்கு ஆசிரியர் மாணவர், பெற்றோர், பழைய மாணவர், நண்பர்முதலியோர் ஒன்றுய்க்குழுமி பிரியாவிடை கூறும் வைபவம் இன்று நடைபெறுகின்றது!

திருமதி அ. இரகுநாதன்

## இட மாற்றம்

(புலோலி)

மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் இலிகிதராகக் கடமையாற்றிய திரு க.தர்மகுலசிங்கம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

## வணிகமலர் இன்று வெளியீடு

(கோண்டாவில்)

யாழ். தொழில் நுட்பக் கல்லூரியின் 25-வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் முகமாக தொழில் நுட்பக் கல்லூரி வணிக மாணவர் மன்றம், வணிக மலரொன்றை இன்று வெளியிடுகிறது.

திரு. க. பிரேமானந்தன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் யாழ். பல்கலைக் கழக வணிகத்துறைத் தலைவர் கலாநிதி வி. நித்தியானந்தன் ஆய்வுரை நிகழ்த்துவார். தொழில்நுட்பக் கல்லூரி வணிகத் துறைத் தலைவர் திரு. அ. இரத்தினம், யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் எம். ஏ நுஃமான் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்துவார்.

## கம்யூனிஸ்ட் கட்சி பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 41-வது ஆண்டு நிறைவு விழாவும், பொதுக்கூட்டமும் யாழ். நகரமண்டபத்தில், இம்மாதம் 12-ம் தேதி பிற்பகல் நடைபெறும்.

இக்கூட்டத்தில் கலவானத் தொகுதி எம். பி. திரு. சரத் முத்தெட்டுவேகமவிற்குப் பகிரங்க வரவேற்பு அளிக்கப் படும்.

கம்யூனிஸ்ட்கட்சியின் யாழ். மாவட்டச் செயலாளர் திரு. பொன். குமாரசாமி தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச்செயலாளர் திரு கே. பி. சில்வா, ''இன்றைய அரசியல் நிலையும், தமிழ் மக்கள் பிரச்னையின் தீர்வுக்குக் கம்யூனிஸ்ட் கட்சி காட்டும் [illegible] வழங்குவார். (க)


## மரணஅறிவித்தல்

### வடிவேலு ஸ்ரீமோகன்



யாழ்ப்பாணம் கொட்டடியைச் சேர்ந்த வடிவேலு ஸ்ரீமோகன் 5-7-84ல் காலமானுர். இவர் வடிவேலு, பார்வதி ஆகியோரின் அன்பு மகனும் யாழ் மார்க்கட் பாய்க்கடை உரிமையாளரும், ரஞ்சன், ஜெகநாதன் -குணம் (ஈராக்), ரகுநாதன். இராஜலெட்சுமி,சிவநாதன், சத்தியபாமினி, சசிகரன், கருணுகரன் ஆகியோரின் சகோதரரும் கதிராசியின் பெரனுமாவார். அவரின் இறுதிக்கிரியை இன்று (10-07-84) பிற்பகல் 3-00 மணிக்கு வில்லூன்றி மயானத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். 805



முடிவு திகதி பின்போடப்பட்டது

இரசிகமணி கனக செந்திநாதன் நினைவுக் குறுநாவல் போட்டி

★ 1-ம் பரிசு ரூபா 500-00

★ 2-ம் பரிசு ரூபா 300-00

★ அமரர் இரசிகமணி கனக செந்திநாதன் அவர்களின் நினைவாக யாழ். இலக்கிய வட்டமும் 'ஈழநாடு'ம் இணைந்து நடத்தும் இக் குறுநாவல் போட்டியில் எழுத்தாளர்கள் எவரும் கலந்து கொள்ளலாம்.

★ ஆக்கங்கள் தமது சொந்தப் படைப்புக்கள் என உறுதிப்படுத்தப் பட்டிருக்க வேண்டும்.

★ தாளின் ஒருபக்கத்தில் மட்டும் (புல்ஸ்காப்) 30 முதல் 80 பக்கங்களுக்கு மேற்படாதிருக்க வேண்டும்.

★ உறையின் இடது மேல் மூலையில் 'இரசிகமணி கனக செந்திநாதன் நினைவுக் குறுநாவல் போட்டி' எனக் குறிப்பிடவும்.

எழுத்தாளர்கள் தங்கள் குறுநாவலை 15-8-84 திகதிவரை அனுப்பலாம்.

★ அனுப்பவேண்டிய முகவரி :

இரசிகமணி குறுநாவல் போட்டி

ஈழநாடு வாரமலர்,

த. பெ. எண் : 49,

யாழ்ப்பாணம்.


இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஜுலை மாதம் 10ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49, Telegram Eelanadu Telephone: 22389 — 24126.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org